227

தமிழ்மணி மாலை

நான்காம் படிவம்
சிறப்பு

பழனியப்பா பிரதர்ஸ்
திருச்சி & சென்னை - 5

Ta
031(91)
N54
146451

தமிழ் மணி மாலை

நான்காம் படிவம் : சிறப்புப் பகுதி

தொகுத்தோர் :

வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனார்

தமிழ் விரிவுரையாளர், புனித சூசையப்பர் கல்லூரி, திருச்சி

வித்துவான் திரு. த. கி. குப்புசாமி ஆழ்வார்

தலைமைத் தமிழாசிரியர். புனித சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி, திருச்சி

பழனியப்பா பிரதர்ஸ்

தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி & சேப்பாக்கம் சென்னை-5

பதிப்புரிமை] 1954 [ரூ. 0—12—0

முகவுரை

மாணவர்கட்குத் தமிழ்மொழியில் ஆர்வமும் புத்துணர்ச்சியும் உண்டாகும் வகையில் சென்னை அரசியல் கல்வித் துறையினர் அண்மையில் (27-1-54) வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தை ஒட்டியும், பள்ளி யிறுதித் தமிழ்த்தேர்வு பாட புத்தக அமைதியை மேற்கொண்டும் 'தமிழ் மணி மாலை' என்னும் இப்புத்தக வரிசை வெளி வருகின்றது. அவ் வரிசையுள் இப்புத்தகம் நான்காம் படிவம் பொதுப் பகுதிக்குரியது.

பாமணி மாலைப் பகுதியில் பழங்கால, இடைக்கால, இக்கால நூல்களிலிருந்து மாணவர் தகுதிக்கேற்பச் செய்யுட்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. உரைமணி மாலைப் பகுதியில் இலக்கியம், கலை, நாடகம், கதை, பிரயாணம் சொற்பொழிவு, கடிதம் முதலிய பலவகைக் கட்டுரைகள் தொகுக்கப் பெற்றுள்ளன.

செய்யுட் பகுதி ஒவ்வொன்றிலும் சுருக்கமான நூல் வரலாறு, ஆசிரியர் வரலாறு அரும்பதவுரை, பயிற்சி வினுக்களும், உரைநடைப் பகுதியில் அரும்பதவுரை, பயிற்சி வினுக்களும் மாணவர் நலங்கருதிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

எமது வேண்டுகோட்கிணங்கி இந்நூலில் சேர்த்துக் கொள்ளும்படி தத்தம் கவிதைகளையும் கட்டுரைகளையும் வழங்கிய பேரறிஞர்கட்கு எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இதனை வெளியிட்ட பழனியப்பா பிரதர்ஸ் உரிமையாளரும் எமது உழுவலன்பருமாகிய உயர்திரு. செ. மெ. பழனியப்பச் செட்டியார் அவர்களுக்கும் எமது நன்றி உரியதாகும்.

நன்முறையில் அமைக்கப்பட்டுள்ள இப்புத்தகத்தைக் கல்வியதிகாரிகளும் கல்வி நிலையத் தலைவர்களும், தமிழாசிரியர்களும் ஆதரித்து எங்களை ஊக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

திருச்சிராப்பள்ளி
10—10—54

திரு. ஐயன்பெருமாள் கோனார்
த. கி. குப்புசாமி ஆழ்வார்

உள்ளுறை

பாமணி மாலை

எண்	பொருள்			பக்கம்
I. வாழ்த்து				
1	தேவாரம்	...	...	1
2.	நாலாயிர திவ்யப் பிரபந்தம்	...	...	2
3.	திருப்புகழ்	...	...	2
II. அறவுரை				
1.	புறநானூறு	...	...	4
2.	சிலப்பதிகாரம்	...	...	5
3.	மணிமேகலை	...	...	6
III. கதை				
1.	கம்பராமாயணம்	...	...	8
2.	பாஞ்சாலி சபதம்	...	...	15
IV. சிறுநூல்கள்				
1.	மதுரைக்கலம்பகம்	...	...	21
2.	திருக்குற்றுலக் குறவஞ்சி	...	...	22
3.	அழகரந்தாதி	...	...	23
V. பல்சுவை				
1.	யானை மறம்	...	...	24
2.	படுகளத்தில் வீரர்	...	...	24
3.	தென்றல் வருகை	...	...	25
4.	ஏரின் சிறப்பு	...	...	26

உரைமணி மாலை

எண்	பொருள்	பக்கம்
1.	**பண்டை உரைநடை** *பரிமேலழகர்.*	27
2.	**செல்வம்** *திரு. ந. ஆறுமுக நாவலர்.*	29
3.	**வரலாறும் காவியமும்** *டாக்டர் திரு. மு. வரதராசனுர், எம். ஏ., எம். ஓ. எல்.-*	33
4.	**தமிழர் கண்ட அரசர்** *திரு. அ. ச. ஞானசம்பந்தம், எம். ஏ.*	39
5.	**பாட்டும் பரிசும்** *வித்துவான் திரு. கி. வா. ஜகந்நாதன், பி. ஓ. எல்.*	45
6.	**ஓவியக் கலை** *திரு. கா. மு. இராமசாமி, பி. ஏ., எல். டி*	52
7.	**பாரதியும் பெண்மையும்** *திருமதி. ர. இராசாமணியம்மையார், எம். ஏ.*	58
8.	**எவரஸ்டு வீரர்** *திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ,. எல். டி., பி. ஓ. எல்.*	64

தமிழ்மணி மாலை

நான்காம் படிவம்—சிறப்புப் பகுதி

பாமணி மாலை

I. வாழ்த்து

1. தேவாரம்

தேவாரம் : தே + ஆரம் எனப் பிரித்து, தெய்வத்திற்கு அன்போடு சூட்டப்படுகின்ற பூமாலை போன்ற பாமாலை ; தே + வாரம் எனப் பிரித்து, தெய்வத்தைப் பற்றிய இசைப் பாட்டு என இரு வகையாகவும் பொருள் கொள்வர். இது அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும் சைவ சமயகுரவர் மூவரும் பல தலங்களில் சிவபெருமானை வழிபட்டுப் பாடிய தோத்திரப் பாடல்களின் தொகுப்பாகும்.

திருஞானசம்பந்தர் : இவர், சோழ நாட்டில் சீர்காழியில் அந்தணர் குலத்தில்சிவபாதவிருதயருக்குப்பகவதியாரிடம் திருக்குமாரராய்த் தோன்றியவர்; சிவனருளால் மூன்றும் ஆண்டிலேயே ஞானப்பாலுண்ணப் பெற்று சிவதலங்கள் தோறும் சென்று, பல தேவாரப் பதிகங்களைப் பாடியவர். இவரது காலம், கி. பி. 7-ஆம் நூற்றாண்டு என்பர்.

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே

—திருஞானசம்பந்தர்.

அருஞ்சொற் பொருள்

சாம் நாளும் - இறக்கப்போகும் நாள் இன்ன தென்பதையும். சாய்க்காடு - திருச்சாய்க்காடு என்னும் சிவதலம். நாமம் - திருப்பெயர்கள். நவின்று ஏத்த-சொல்லித் துதிக்க.

2. நாலாயிர திவ்யப் பிரபந்தம்

நாலாயிர திவ்யப் பிரபந்தம்: வைணவ சமயப் பெரியோராகிய ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிச் செய்த நாலாயிரம் அருங்கவிகளை யுடைய நூல். இதில் ஒரு பகுதியாகிய பெருமாள் திருமொழியிலுள்ளது இப்பாசுரம்.

குலசேகராழ்வார்: இவர், சேர நாட்டில் கோழிக்கூடு என்னும் ராஜதானியை அரசாண்ட திடவிரதன் என்னும் அரசனுக்குத் திருக்குமாரராய்த் தோன்றியவர். புவிச் சக்கரவர்த்தியாகவும் கவிச் சக்கரவர்த்தியாகவும் விளங்கியவர். திருமாலிடத்து ஆராத அன்புடைய இவரைக் குலசேகர ஆழ்வார், குலசேகரப் பெருமாள், பெருமாள் என்றும் வழங்குவர். இவரது காலம், கி. பி. 8-ஆம் நூற்றாண்டு என்பர்.

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட்டு அம்மா நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

—**குலசேகராழ்வார்.**

அருஞ்சொற்பொருள்

வாள் - கத்தி. சுடினும் - காய்ந்த ஊசியினால் சுட்டாலும். மருத்துவன்பால் - வைத்தியனிடம். மாயத்தால் - உன் மாயையினால். மீளாத் துயர் - நீங்காத துன்பம். வித்துவக்கோடு - திருவித்துவக்கோடு என்னும் மலைநாட்டுத் திருப்பதி. அம்மா - பெருமானே. ஆள் ஆக - (பிறர்க்கு அடியவனாகாமல் உனக்கே) அடியவனாக.

3. திருப்புகழ்

திருப்புகழ்: முருகக் கடவுளைப் பற்றிய அழகிய புகழ் மொழிகளை யுடைய நூல். இதிலுள்ள பாடல்கள் யாவும் சந்தப் பாடல்களாம்.

அருணகிரிநாதர்: இவர் தொண்டை நாட்டிலுள்ள திருவண்ணாமலையில் தோன்றியவர். இவரது வரலாறு பற்றிய செய்தி எதுவும் திட்டமாய்த் தெரிந்திலது. முருகப் பெருமானருளால் கவிபாடும் திறம் பெற்றுக் குமரக் கடவுள் கோயில் கொண்டுள்ள திருப்பதி தோறும் சென்று திருப்புகழ் பாடிவந்தார் என்பர். இவரது காலம், கி.பி. 15-ஆம் நூற்றாண்டு என்பர்.

வஞ்சக லோபமூடர் தம்பொரு ளூர்கள்தேடி
மஞ்சரி கோவைதூது பலபாவின்
வண்புகழ் பாரிகாரி யென்றிசை வாது கூறி
வந்தியர் போலவீணில் அழியாதே

செஞ்சர ணுதகீத கிண்கிணி நீபமாலை
திண்டிறல் வேல்மயூர முகமாறும்
செந்தமிழ் நாலுமோதி உய்ந்திட ஞானமூறு
செங்கனி வாயிலோர்சொல் அருள்வாயே
பஞ்சவன் நீடுகூனு மொன்றிடு தாபமோடு
பஞ்சற வாதுகூறு சமண்முகர்
பண்பறு பீலியோடு வெங்கழு வேறவோது
பண்டித ஞானநீறு தருவோனே
குஞ்சரம் யாளிமேவு பைம்புன மீதுலாவு
குன்றவர் சாதிகூடி வெறியாடிக்
கும்பிட நாடிவாழ்வு தந்தவ ரோடுவீறு
குன்றுதோ ராடல்மேவு பெருமாளே.

—அருணகிரிநாதர்.

அருஞ் சொற்பொருள்

மஞ்சரி - (பூங்கொத்து) பலவகைப்பட்ட பிரபந்தம். கோவை தூது - தமிழில் வழங்கும் சிறு நூல் வகைகள். பாரி, காரி - கடையெழு வள்ளல்களிற் சிறந்த இருவர். வந்தியர் - துதிபாடுவோர். நாதகீத கிண்கிணி - இசை ஒலிக்கும் சதங்கை. நீப மாலை - கடப்ப மலர் மாலை. திண்திறல் - மிக்க வலிமை. மயூர — மயில் வாகனனே. உய்ந்திட — கடைத்தேற. பஞ்சவன் - கூன்பாண்டியன். நீடு கூன் — மிக வளைந்த கூன். தாபம் - வெப்பு நோய். பஞ்சு — எளிமை. சமண்முகர் - சமணராகிய ஊமைகள். பீலி - மயில்தோகை. யாளி - ஒருவகை வன விலங்கு. முருகன், சீர்காழியில் சிவபாத விருதயர் தவத்திற் கிரங்கித் திருஞானசம்பந்தராக அவதரித்தார் என்னும் வழக்குப் பற்றி இங்ஙனம் கூறினர்.

பயிற்சி வினாக்கள்

தேவாரம்

1. நல்வினை பெறுதற்கு ஞானசம்பந்தர் கூறும் உபாயம் என்ன ?
2. ஞானசம்பந்தர் நெஞ்சிற்கு இடும் கட்டளை யாது ?

நாலாயிர திவ்யப் பிரபந்தம்

1. குலசேகராழ்வார் வித்துவக்கோட்டு அம்மானிடம் வேண்டுவ தென்ன ?
2. நோயாளன் இயல்பென்ன ? குலசேகரர் தம்மை நோயாளனோடு ஒப்பிடுவதேன் ?

திருப்புகழ்

1. உலகினர் எவ்வாறு பொருள் தேடி அழிவதாக அருணகிரியார் கூறுகின்றார்?
2. அருணகிரியார் முருகனிடம் வேண்டுவதென்ன ?
3. ஞானசம்பந்தரளித்த திருநீற்றினால் நீங்கிய துன்பங்கள் யாவை ?
4. குமரன் குன்றுதோறும் ஆடல் புரிதல் எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?

II. அறவுரை

1. புறநானூறு

புறநானூறு: புறப் பொருளைப் பற்றிக் கூறும் நானூறு பாட்டுக்களை யுடைய தொகைநூல். புறப் பொருளாவன: அறமும் பொருளுமாம். இது எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகும்; கடைச் சங்க காலத்து நல்லிசைப் புலவர்களால் பாடப்பட்ட பாக்களைக் கொண்டு தொகுக்கப் பட்டதாகும்.

உலகில் உயர்ந்தோர்

உண்டால் அம்ம! இவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. 1

—கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

உலகத்தியற்கை

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே 2

—ஔவையார்

அருஞ்சொற் பொருள்

1. ஆல், அம்ம - அசைகள். இந்திரர் அமிழ்தம் - தேவாமிர்தம். இயைவது - கிடைப்பது. தமியர் - தனித்தவராய். முனிவு - வெறுப்பு. துஞ்சல் - சோம்பியிருத்தல். அயர்வு - மனக் கவற்சி. நோன் தாள் - வலிய முயற்சி. முயலுநர் - முயற்சி செய்பவர்.

2. ஒன்றோ - எண்ணிடைச்சொல். அவல் - பள்ளம். மிசை - மேடு. எவ்வழி - எவ்விடம். நல்லை - நன்மையுடையை.

2. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம்: சிலம்பினது அதிகரித்தலையுடைய நூல். சிலம்பு காரணமாக விளைந்த கோவலனது வரலாற்றைச் சொல்லுவதால், இந் நூல் சிலப்பதிகாரம் என்னும் பெயர் பெற்றது. இது, ஐம்பெருங் காப்பியங் களில் ஒன்று. இக்காப்பியம் தமிழ்நாட்டு முடிமன்னர் மூவர்க்கும் உரியது. சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து விளங்குவது.

இளங்கோவடிகள்: இவர், சேரநாட்டை யாண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு நற்சோணையிடம் தோன்றியவர்; தமயன் சேரன் செங்குட்டுவன்; தமயன் பொருட்டு இளமையிலேயே துறவு பூண்டவர்; சமண சமயத்தினர்; காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு என்பர்.

கற்றறிந்தோரும் மற்றையோரும்

மறத்துறை நீங்குமின் வல்வினை யூட்டுமென்று
அறத்துறை மாக்கள் திறத்திற் சாற்றி
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறையினும்
யாப்பறை மாக்கள் இயல்பிற் கொள்ளார்
தீதுடை வெவ்வினை யுருத்த காலைப்
பேதைமை கந்தாப் பெரும்பே துறுவர்
ஒய்யா வினைப்பயன் உண்ணுங் காலைக்
கையாறு கொள்ளார் கற்றறி மாக்கள் 1

அறப்பயனும் மறப்பயனும்

நற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலும்
அற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைதலும்
பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவ தன்றே தொன்றியல் வாழ்க்கை 2

—இளங்கோவடிகள்

அருஞ்சொற் பொருள்

1. மறத்துறை - பாவநெறி. அறத்துறை மாக்கள் - அறவோர். திறத்திற் சாற்றி - ஏற்ற வகையாற் சொல்லி. நாக்கு அடிப்பு - நாவாகிய குறுந்தடி. யாப்பு அறை மாக்கள் - அறிவென்னும் உறுதியற்ற மாக்கள். உருத்தகாலை - தோன்றிப் பயனளிக்கும் காலத்து. பேதைமை கந்தா - அறியாமை காரணமாக. பேதுறுவர் - மயக்கமுறுவர். ஒய்யா - போக்க முடியாத. கையாறு - துன்பம்.

2. பொன் படி - பொன்னுலகம். அற்பு - அன்பு. பற்று வழி - அன்பு வைத்தவிடத்து. சேறலும் - பிறத்தலும். தொன்று இயல் வாழ்க்கை - படைப்புக் காலந்தொட்டு நிகழும் வழக்காகும்.

3. மணிமேகலை

மணிமேகலை : கோவலன் மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறும் நூல். இது ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று; முப்பது காதைகளையுடையது; ஒவ்வொன்றும் பெரிய ஆசிரியப்பாவரலாகியது.

சீத்தலைச் சாத்தனார்: இவர், மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் எனப்படுவார். கடைச் சங்கப் புலவர்களில் ஒருவர். மதுரையில் பதினெண் வகைக் கூலங்களை வைத்து வாணிபம் செய்தமையால் இப்பெயர் பெற்றனர் என்பர். 'சீத்தலை' இவர் பிறப்பிடமாகும். பௌத்த மதத்தினர். இவரது காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு என்பர்.

அறத்தின் சிறப்பு

இளமையும் நில்லா ; யாக்கையும் நில்லா ;
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா ;
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார் ,
மிக்க அறமே விழுத்துணை யாவது. 1

வறுமையின் தன்மை

குடிப்பிறப் பழிக்கும், விழுப்பங் கொல்லும்,
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்,
நாணணி களையும், மாணெழில் சிதைக்கும்,
பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்,
பசிப்பிணி என்னும் பாவி. 2

உணவே உயிர்

ஆற்றுநர்க் களிப்போர், அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை ;
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே. 3

—சீத்தலைச் சாத்தனார்

அருஞ்சொற் பொருள்

1. யாக்கை - உடல். வளவிய - வளம் பொருந்திய. புத்தேள் - தேவர்கள். விழுத்துணை - சிறந்த துணை.

2. குடிப்பிறப்பு அழிக்கும்-உயர்ந்த குடியிற் பிறந்த பெருமையைக் கெடுக்கும். விழுப்பம் - சிறப்பு. புணை - தெப்பம். விடூஉம் - நீக்கும். நாண் அணி - நாணமாகிய ஆபரணம். மாண் எழில் - மாட்சிமைப்பட்ட அழகு. பூண் - ஆபரணம். பசிப்பிணி - பசி என்னும் நோய் (உருவகம்).

3. ஆற்றுநர் - பொறுக்கும் வன்மையுடையோர். ஆற்றுமாக்கள் - காணார் கேளார் கால்முடப்பட்டோர் முதலியோர். மண் திணி - மண் செறிந்த, ஞாலம் - உலகம், உண்டி - உணவு.

பயிற்சி வினாக்கள்

புறநானூறு

1. மக்கள் நன்னெறிப்படுவதற்கு கூறும் நரிவெரூஉத்தலையார் உபாயம் யாது?

2. உலகம் எதனால் நிலைபெற்றுள்ளதென இளம் பெருவழுதி தெரிவிக்கின்றார்?

3. தமக்கென முயலாது பிறர்க்கென முயலுவோர் இயல்புகள் யாவை?

சிலப்பதிகாரம்

1. அறத்துறை மாக்கள் யாவர்? அவர்கள் செயல் யாது?

2. யாப்பறை மாக்கள், கற்றறி மாக்கள் இயல்புகளைத் தெரிவிக்க.

3. 'புதுவதன்றே தொன்றியல் வாழ்க்கை'—இவ்வாறு குறிக்கப் படுவன யாவை?

மணிமேகலை

1. அறமே விழுத்துணை - விளக்குக.

2. 'பசிப்பிணி என்னும்பாவி' என்றதேன்?

3. உலகில் மெய்ந்நெறி வாழ்க்கையுடையோர் யார்? உயிர் கொடுத்தோர் யார்?

III. கதை

1. கம்பராமாயணம்

கம்பராமாயணம் : கம்பரது ராமாயணம். இராமாயணம் என்பது இராமனது வரலாற்றைக் கூறும் நூல் என்று பொருள்படும். இது, வட மொழியிலுள்ள வால்மீகி ராமாயணத்தின் வழி நூல் ; இதிகாசமாகும். இதில் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட் கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்தகாண்டம் என்னும் ஆறு பெரும் பிரிவுகள் உள்ளன.

கம்பர் : இவர் சோழ நாட்டில் திருவழுந்தூரில் ஆதித்தனுக்குப் புதல்வராய்த் தோன்றி, திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பவள்ளலால் ஆதரிக்கப் பெற்றுக் கல்வியிற் பெரியராய் விளங்கியவர் ; கவிச் சக்கர வர்த்தி எனப் புகழப் பெற்றவர். இவரது பிறப்பு முதலியவற்றைப் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன; தெளிவாக அறிதற்கில்லை. இவரது காலம், கி. பி. 12-ஆம் நூற்றாண்டு என்பர்.

தசரதன் கண்ணீர்

" கண்ணும் நீராய் உயிரும்
ஒழுகக் கழியா நின்றேன்
எண்ணும் நீர்நான் மறையோர்
எரிமுன் நின்மேற் சொரிய
மண்ணும் நீராய் வந்த
புனலை மகனே வினையேற்கு
உண்ணும் நீராய் உதவி
உயர்கான் அடைவாய் " என்றான். 1

தசரதன் தான் இறப்பது உறுதி எனல்

" அள்ளற் பள்ளப் புனல்சூழ்
அகன்மா நிலமும் அரசும்
கொள்ளக் குறையா நிதியின்
குவையும் முதலாம் எவையும்
கள்ளக் கைகே சிக்கே
உதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளற் றனமென் உயிரை
மாய்க்கும் மாய்க்கும் " என்றான். 2

தசரதனை வசிட்டன் தேற்றுதல்

என்று ஒன்றொன் றெவ்வா
இசைதந் தரசன் உயிரும்
சென்றான் இன்றோ டென்னும்
தன்மை எய்தித் தேய்ந்தான் ;
மென்தோல் மார்பின் முனிவன்
" வேந்தே, அயரேல் ; அவனை
இன்றே காத வண்ணம்
தகைவென் உலகோ " டென்றான். 3

கோசலை கணவனைத் தேம்பாதே எனல்

" மெய்யின் மெய்யே உலகின்
வேந்தர்க் கெல்லாம் வேந்தே
உய்யும் வகைநின் உயிரை
ஓம்பா திங்ஙன் தேம்பின்
வையம் முழுதும் துயரால்
மறுகும் முனிவன் னுடனம்
ஐயன் வரினும் வருமால்
அயரேல் அரசே " என்றாள். 4

தசரதன் கோசலைக்குக் கூறுதல்

பொன்னார் வலயத் தோளான்
கானை புகுதல் தவிரான் ;
உன்னா ருயிரோ அகலா
தொழியாது ; இதுகோ சலைகேள் :
முன்னாள் ஒருமா முனிவன்
மொழியும் சாபம் உளதென்று
அந்நாள் உற்ற தெல்லாம்
அவளுக் கரசன் அறைவான் : 5

தசரதன் வேட்டைக்குச் சென்றமை

" வெய்ய கானத் திடையே
வேட்டை வேட்கை மிகவே
ஐய சென்று கரியோ
டரிகள் துருவித் திரிவேன்
கையார் சிலையும் கணையுங்
கொடுகார் மிருகம் வருமோர்
செய்ய நதியின் கரைவாய்ச்
சென்றே மறைய நின்றேன். 6

தசரதன் அம்பெய்தமை

" ஒருமா முனிவன் மனையோ
டொளியோன் றிலவாய் நயனம்
திருமா மகனே துணையாய்த்
தவமே புரிபோழ் தினின்வாய்
அருமா மகனே புனல்கொண்
டகல்வான் வருமா றறியேன்
பொருமா கணைவிட் டிடலும்
புவிமீ தலறிப் புரள்வான். 7

தசரதன் மக்கட் குரலென்றறிதல்

" புக்குப் பெருநீர் நுகரும்
பொருபோ தகமென் றொலிமேற்
கைக்கட் கணைசென் றதலாற்
கண்ணில் தெரியக் காணேன்
அக்கைக் கரியின் குரலே
அன் றீ தென்ன வெருவா
மக்கட் குரலென் றயர்வேன்
மன்னோர் தவண்வந் தனனால். 8

தசரதன் பரிவுடன் வினவுதல்

" கையும் கடமும் நெகிழக்
கணையோ டுருள்வோற் காணா
மெய்யும் தனுவும் மனனும்
வெறிதே கிடமேல் விழா
' ஐயன், நீ தான் யாவன்?
அந்தோ அருள்' கென் றயரப்
பொய்யொன் றறியா மைந்தன்
கேள்நீ யென்னப் புகல்வான்: 9

பார்ப்பன மைந்தன் தன் வரலாறு கூறல்

" அந்நான் முகனார் வழியில்
அருள்கா சிபனன் மைந்தன்
மின்னார் புரிநூல் மார்பன்
விருத்தே சனன்மெய்ப் புதல்வன்
நன்னான் மறைநூல் தெரியும்
நாவான் சலபோ சனப்பேர்
சொன்னான் முனிவன் தருசு
ரோசன் னன்னென் பெயரோன்; 10

பார்ப்பன மைந்தன் பெருந்தன்மை

" இருகண் களுமின் றியதாய்
தந்தைக் கும்மீங் கவர்கள்
பருகும் புனல்கொண் டகல்வான்
படர்ந்தேன் ; பழுதா யினதால் ;
இருகுன் றனைய புயத்தாய்,
இபமென் றுணரா தெய்தாய் ;
உருகுந் துயரம் தவிர்நீ
ஊழின் செயலீ தென்றே. 11

பார்ப்பன மைந்தன் வேண்டுகோள்

" 'உண்ணீர் வேட்கை மிகவே
உயங்கும் எந்தைக் கொருநீ
தண்ணீர் கொடுபோ யளித்தென்
சாவும் உரைத்தும் புதல்வன்
விண்மீ தடைவான் தொழுதான்
எனவும் அவர்பால் விளம்' பென்று
எண்ணீர் மையினன் விண்ணோர்
எதிர்கொண் டிடவே கினனால். 12

தாய் தந்தையர் நிலை

" மைந்தன் வரவே நோக்கும்
வளர்மா தவர்பால் மகவோடு
அந்தண் புனல்கொண் டணுக,
'ஐயா இதுபோ தளவாய்
வந்திங் கணுகா தென்னே
வந்த தென்றே நொந்தேம் ;
சந்தம் கமழும் தோளாய்,
தழுவிக் கொளவா' எனவே, 13

தசரதன் தன் செயலைக் கூறல்

" ஐயா யானோர் அரசன் ;
அயோத்தி நகரத் துள்ளேன் ;
மையார் மிருகந் துருவி
மறைந்தே வதிந்தேன் இருள்வாய்ப்
பொய்யா வாய்மைப் புதல்வன்
புனல்மொண் டிடுமோ தையின்மேல்
கையார் கணைசென் றதலாற்
கண்ணிற் றெரியக் காணேன். 14

மைந்தன் இறந்தமை கூறுதல்

" வீட்டுண் டலறுங் குரலால்
வேழக் குரலன் றெனவே
ஓட்டந் தெதிரா ' நீயார் '
எனஉற் றவெலாம் உரையா
வாட்டந் தருநெஞ் சினனாய்
நின்றான் வணங்கா வானோர்
ஈட்டம் எதிர்வந் திடவே
இறந்தே கினன்விண் ணிடையே. 15

தசரதன் மன்னிக்க வேண்டுதல்

" ' அறுத்தாய் கணையால் எனவே
அடியேன் றன்னை ஐயா
கறுத்தே அருளாய் ; யானோ
கண்ணிற் கண்டே னல்லேன்
மறுத்தான் இல்லான் வனமொண்
டிடுமோ ஃதயினெய் ததலால்
பொறுத்தே அருள்வாய்" என்று
இருதாள் சென்னி புனைந்தேன். 16

பெற்றோர் துயரம்

" வீழ்ந்தார் அயர்ந்தார் புரண்டார்
விழிபோ யிற்றின் றென்றார் ;
ஆழ்ந்தார் துன்பக் கடலுள் ;
ஐயா ஐயா என்றார் ;
போழ்ந்தாய் நெஞ்சை என்றார் ;
' பொன்னு டதனிற் போய்நீ
வாழ்ந்தே இருபத் தரியேம்
வந்தேம் வந்தேம் இனியே ' 17

தசரதன் கூறிய ஆறுதல் மொழி

" என்றென் றயருந் தவரை
இருதாள் வணங்கி ' யானே
இன்றும் புதல்வன் ; இனிநீர்
ஏவும் பணிசெய் திடுவேன் ;
ஒன்றும் தளர்வுற் றயரீர் ;
ஒழிமின் இட'ரென் றிடலும்,
வண்திண் சிலையாய், கேண்மோ,
எனவே ஒருசொல் வகுத்தான்: 18

மாதவர் அளித்த சாபம்

“ கண்ணுள் மணிபோல் மகவை
இழந்தும் உயிர்கா தலியா
உண்ணு எண்ணி இருந்தால்
உலகோர் என்னென் றுரையார் ;
விண்ணின் தலைசே ருதும்யாம் ;
எம்போல் விடலை பிரியப்
பண்ணும் பரிமா உடையாய்,
அடைவாய் படர்வான்’ என்று, 19

மாதவர் இறத்தல்

“ தாவா தொளிருங் குடையாய்,
தவறிங் கிதுநின் சரணம்
காவாய் என்ருய் ; அதனுல்
கடிய சாபம் கருதேம் ;
ஏவா மகவைப் பிரிந்தின்
றெம்போல் இடருற் றனைநீ
போவாய் அகல்வான்’ என்னுப்
பொன்னுட் டிடைபோ யினரால். 20

அன்றைய மகிழ்வும் இன்றைய துயரும்

“ சிந்தை தளர்வுற் றயர்தல்
சிறிதும் இலனுய் இன்சொல்
மைந்தன் உளனென் றதனுன்
மகிழ்வோ டிவணவந் தனெனுல் ;
அந்த முனிசொற் றமையின்
அண்ணல் வனமே குதலும்
என்றன் உயிர்வீ குதலும்
இறையும் தவரு” என்ருன். 21

அருஞ் சொற்பொருள்

1. ஒழுக - செல்ல. கழியா நின்றேன் - சாகும் நிலையை அடைந்தேன். எண்ணும் நீர் - மதிக்கப்படும் மஞ்சன நீர். எரி - (ஓம) நெருப்பு. மண்ணும் நீர் - அபிஷேக நீர். புனலை - தீர்த்தங்களை. கான் - காடு.

2. அள்ளல் - சேறு. நிதியின் குவை - செல்வக் குவியல். வள்ளல் தனம் - வள்ளல் தன்மை. மாய்க்கும் - போக்கிவிடும்.

3. ஒவ்வா - பொருந்தாத. இசைதந்து - சொல்லி. முனிவன் - வசிட்டன். அயரேல் - வருந்தாதே. தகைவென் - தடுப்பேன்.

4. உய்யும் - பிழைத்திருக்கும். தேம்பின் - வருந்தினால். வையம் உலகம். மறுகும் - கலங்கும்.

5. வலயம் - தோள் வளையல். தவிரான் - கைவிடான். அவளுக்கு கோசலையிடம் ; உருபுமயக்கம்.

6. வெய்ய - கொடிய. வேட்கை - ஆசை. கரியோடு அரிகள் - யானைகளையும் சிங்கங்களையும். சிலையும் கணையும் - வில்லும் அம்பும். கார் மிருகம் - பெரிய மிருகங்கள். செய்ய - ஓரமாகிய.

7. நயனம் - கண். புனல் - தண்ணீர். அருமாமகன் - கிடைத்தற் கரிய சிறந்த புதல்வன். பொருமாகணை - போரிடும் சிறந்த அம்பு ; சப்த வேதி என்பர்.

8. நுகரும் - குடிக்கின்ற. போதகம் - யானைக்கன்று. அயர்வேன் - சோர்வுற்று. அவண் - அவ்விடம்.

9. கடமும் - கமண்டலமும். தனுவும் - வில்லும். வெறிது ஏகிட பயனற்றுச் சென்றிட. அந்தோ - ஐயோ.

10. நான்முகனார் - பிரமன். வழியில் - பரம்பரையில். நாவான் நாவையுடையவன்.

11. இன்றிய - இல்லாத. அகல்வான் – போவதற்காக. படர்ந் தேன் - வந்தேன். பழுது ஆயினது - தவறியது. இபம் - யானை. தவிர் நீங்கு ; விடு.

12. நீர் உண் வேட்கை - நீர் பருகும் ஆசை. உயங்கும் - வருந்தும். எண் நீர்மையினான் - யாவரும் மதிக்கத்தகும் தன்மையன். விண்ணோர் - தேவர்.

13. மாதவர் - உயர்ந்த தவத்தை யுடையோர். அம் தண் புனல் - நல்ல குளிர்ந்த நீர். சந்தம் - அழகு. கமழும் - விளங்கும்.

14. மை ஆர் மிருகம் - கருமை பொருந்திய யானை. இருள்வாய் இருட்டில். ஓதை - ஓசை.

15. வீட்டுண்டு – வீழ்த்தப்பட்டு. வேழம் - யானை. ஓட்டந்து – ஓடிப்போய். ஈட்டம் - கூட்டம்.

16. கறுத்தே அருளாய் - கோபிக்காமலிருப்பீராக. மறு - குற்றம். வனம் – தண்ணீர். சென்னி - தலை.

17. போழ்ந்தாய் - பிளந்தாய். பொன் + நாடு = பொன்னாடு. தரி யேம் - பொறுக்கமாட்டோம்.

18. அயரும் - வருந்தும். இடர் - துன்பம். கேண்மோ - கேள். மோ - முன்னிலை அசை.

19. விண்ணின் தலை - மேலுலகுக்கே. சேருதும் - போவோம். பண்ணும் பரிமா - அலங்கரிக்கப்பட்ட குதிரை. விடலை - மகன். படர் வான் - பரந்த வானுலகம்.

20. தாவாது - கெடாமல். சரணம் - அடைக்கலம். கடிய - அஞ்சத்தக்க. ஏவா மகவு - குறிப்பறிந்து நடக்க வல்ல மகனை.

21. இவண் - அயோத்தி. சொற்றமையின் - சொன்னபடியால். அண்ணல் - இராமன். வீகுதலும் - நீங்குதலும். இறையும் - சிறிதும்.

2. பாஞ்சாலி சபதம்

பாஞ்சாலி சபதம் : பாஞ்சாலியினது சபதத்தைக் கூறும் நூல். பாஞ்சாலி - பாஞ்சால நாட்டு அரசனாகிய பாஞ்சாலனது மகள். பாஞ்சாலனுக்குத் துருபதன் என்பது இயற்பெயர். துருபதன் மகள் திரௌபதி எனப்பட்டாள். சபதம் - சூளுரை.

பாரதியார் : இவர் தேசியக் கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியாராவர்; பாண்டிய நாட்டில் எட்டயபுரத்தில் சின்னசாமி ஐயருக்கு இலக்குமி அம்மாளிடம் தோன்றியவர். இளமையிலேயே தமிழ்ப் பற்றுடையவராய்த் தமிழ் நூல்களைப் பயின்று பாடலியற்றும் ஆற்றல் மிக்க கவிஞர். புத்தம் புதிய பாக்கள் இயற்றித் தமிழருக்கு நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் வளர்த்த தேசியக்கவிஞர். இவரியற்றிய நூல்களில் காவியமாகப் பாராட்டப்படுவது பாஞ்சாலி சபதமாகும். இவரது காலம் கி. பி. 1882—1921.

[துரியோதனன் திரௌபதியை அரசவைக்கு அழைத்துவரும்படி விதுரனை ஏவ விதுரன் துரியனுக்குப் புத்திமதி கூறல்.]

துரியோதனன் விதுரனைநோக்கி யுரைப்பது

"செல்வாய் விதுராநீ சிந்தித் திருப்பதேன்?
வில்நா ணுதலினள் மிக்க எழிலுடையாள்
முன்னேபாஞ் சாலர் முடிவேந்தன் ஆவிமகள்
இன்னேநாம் சூதில் எடுத்த விலைமகள்பால்
சென்றுவிளை வெல்லாம் செவ்வனே தானுணர்த்தி
மன்றினிடையுள்ளானின்மைத்துனனின்னோர் தலைவன்
நின்னையழைக் கின்றான் நீள்மனையி லேவலுக்கே
என்னவுரைத் தவளை இங்குக்கொணர் வாய்"என்றான்.

விதுரன் சினந்து கூறுதல்

துரியோ தனனிச் சுடுசொற்கள் கூறிடவும்
பெரியோன் விதுரன் பெரிதும் சினங்கொண்டு
மூட மகனே மொழியொணு வார்த்தையினைக்
கேடு வரலறியாய்க் கீழ்மையினால் சொல்லிவிட்டாய்.
புள்ளிச் சிறுமான் புலியைப்போய்ப் பாய்வதுபோல்
பிள்ளைத் தவளை பெரும்பாம்பை மோதுதல்போல்
ஐவர் சினத்தின் அழலை வளர்க்கின்றாய்
தெய்வத் தவத்தியைச் சீர்குலையப் பேசுகின்றாய்
நின்னுடைய நன்மைக்கிந் நீதியெல்லாம் சொல்லு
[கின்றேன்
என்னுடைய சொல்வே றெவர்பொருட்டு மில்லையடா!
பாண்டவர்தாம் நாளைப் பழியிதனைத் தீர்த்திடுவார்
மாண்டு தரைமேல் மகனே கிடப்பாய்நீ
சொல்லி விட்டேன் பின்னொருகால் சொல்லேன்
[கவுரவர்காள்!
புல்லியர்க் கின்பம் புவித்தலத்தில் வாராது
பேராசை கொண்டு பிழைச்செயல்கள் செய்கின்றீர்
வாராத வன்கொடுமை மாவிபத்து வந்துவிடும்
பாண்டவர்தம் பாதம் பணிந்தவர்பாற் கொண்ட
[தெல்லாம்
மீண்டவர்க்கே ஈந்துவிட்டு, விநயமுடன்
"ஆண்டவரே யாங்கள் அறியாமை யாற்செய்த
நீண்ட பழியிதனை நீர்பொறுப்பீர்" என்றுரைத்து
மற்றவரைத் தங்கள் வளநகர்க்கே செல்லவிடீர்.
குற்றம் தவிர்க்கும் நெறியிதனைக் கொள்ளீரேல்
மாபார தப்போர் வரும்நீர் அழிந்திடுவீர்
பூபாலரே" என்றப் புண்ணியனுங் கூறினான்

துரியோதனன் கூறுதல்

சொல்லிதனைக் கேட்டுத் துரியோதன மூடன்
வல்லிடிபோல சீச்சீ! மடையா கெடுகநீ
எப்போதும் எம்மைச் சபித்தல் இயல்புனக்கே
இப்போதுன் சொல்லை எவரும் செவிக்கொள்ளார்.
யாரடா தேர்ப்பாகன் நீபோய்க் கணமிரண்டில்
பாரதர்க்கு வேந்தன் பணித்தான் எனக்கூறிப்
பாண்டவர்தம் தேவிதனைப் பார்வேந்தன் மன்றினிலே
ஈண்டழைத்து வாவென் றியம்பினான்.

தேர்ப்பாகனும் திரௌபதியும்

ஆங்கே
தேர்ப்பாகன் விரைந்துபோய்ப் பாஞ்சாலி வாழ்மனையில்
சோகம் ததும்பித் துடித்த குரலுடனே
"அம்மனே போற்றி! அறங்காப்பாய் தாள்போற்றி
வெம்மை யுடைய விதியால் யுதிட்டிரனார்
மாமன் சகுனியொடு மாயச்சூ தாடியதில்
பூமி யிழந்து பொருளிழந்து தம்பியரைத்
தோற்றுத் தமது சுதந்தரமும் வைத்திழந்தார்
சாற்றிப் பணயமெனத் தாயே உனைவைத்தார்
சொல்லவுமே நாவு துணியவில்லை தோற்றிட்டார்
எல்லாரும் கூடி யிருக்கும் சபைதனிலே
நின்னை யழைத்துவர நேமித்தான் எம்மரசன்"
என்ன வுரைத்திடலும், "யார்சொன்ன வார்த்தையடா!
சூதர் சபைதனிலே தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா யார்பணியால்
என்னை யழைக்கின்றாய்?" என்றாள். அதற்கவனும்
மன்னன்சுயோதனன் தன்வார்த்தையினால்" என்றிட்டான்.
"நல்லது; நீசென்று நடந்தகதை கேட்டுவா
வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்
என்னைமுன் னேகூறி யிழந்தாரா? தம்மையே
முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?
சென்று சபையிலிச் செய்தி தெரிந்துவா"
என்றவளும் கூறி, இவன்போ கியபின்னர்த்

திரௌபதியின் நிலை

தன்னந் தனியே தவிக்கு மனத்தளாய்
வன்னங் குலைந்து மலர்விழிகள் நீர்சொரிய
உள்ளத்தை அச்சம் உலைவுறுத்தப் பேய்கண்ட
பிள்ளையென வீற்றிருந்தாள்.

தேர்ப்பாகன் துரியோதனனிடம் கூறுதல்

பின்னந்தத் தேர்ப்பாகன்
மன்னன் சபைசென்று, "வாள்வேந்தே ஆங்கந்தப்
பொன்னரசி தாள்பணிந்து போதருவீர்" என்றிட்டேன்
"என்னைமுதல் வைத்திழந்த பின்பு தன்னையென்
மன்ன ரிழந்தாரா? மாறித் தமைத்தோற்ற
பின்னரென்னைத் தோற்றாரா? என்றேநும் பேரவையை
மின்னற் கொடியார் வினவிவரத் தாம்பணித்தார்
வந்து விட்டேன்" என்றுரைத்தான்.

அவையோர் நிலை

மாண்புயர்ந்த பாண்டவர்தாம்
நொந்துபோ யொன்றும் நுவலா திருந்துவிட்டார்
மற்றும் சபைதனிலே வந்திருந்த மன்னரெல்லாம்
முற்று முரையிழந்து மூங்கையர்போல் வீற்றிருந்தார்

துரியோதனன் சொல்வது

பாக னுரைத்தது கேட்டனன்—பெரும்
பாம்புக் கொடியவன் சொல்கின்றான்—'அவள்
பாக னழைக்க வருகிலள்—இந்தப்
பையனும் வீமனை யஞ்சியே—பல
வாகத் திகைப்புற்று நின்றனன்—இவன்
அச்சத்தைப் பின்பு குறைக்கின்றேன்—தம்பீ!
போகக் கடவையிப் போதங்கே—இங்கப்
பொற்றொடி யோடும் வருகநீ!

அருஞ்சொற் பொருள்

வரி 1 - 10: நாண் - வெட்கமடையும். நுதலினாள் - நெற்றியை யுடையவள். எழில் - பேரழகு. செவ்வனே - நன்றாக. ஏவலுக்கு — தொண்டு செய்வதற்கு.

வரி 11 - 20: மொழியொணா - சொல்லத்தகாத. அழல் - நெருப்பு. தவத்தி - தவத்தினாற் பிறந்தவள். மாண்டு - இறந்து.

வரி 21 - 30: கவுரவர்காள் - குரு வமிசத்தில் தோன்றிய துரியோதனாதியர்களே. புல்லியர்க்கு - அற்பர்களுக்கு. புவித்தலத்தில் - பூமியில்.

மா விபத்து - பெரிய ஆபத்து. விநயமுடன் - அன்புடன். வளநகர்க்கு - செழிப்புள்ள இந்திரப் பிரஸ்தத்திற்கு.

வரி 31 - 40 : பூபாலரே - அரசர்களே. புண்ணியன் - விதுரன். வல்லிடி - கொடிய இடி. கணம் - நொடிப்பொழுது. பாரதர் - பாரத நாட்டுமக்கள். பணித்தான் - கட்டளையிட்டான். மன்றினிலே – சபையிலே.

வரி : 41 - 50 : தாள் - பாதம். சாற்றி - சொல்லி. பணயம் - பந்தயப் பொருள். நாவு - நாக்கு.

வரி 51 - 60 : நேமித்தான் - நியமித்தான். சூதர் - சூதாடுவோர். தொல்சீர் - பழமையான சிறப்புடைய. மரபு - முறைமை. பணி - கட்டளை. சுயோதனன் - துரியோதனன். மாண்பு – பெருமை. நாயகர் - கணவர்.

வரி 61 - 70 : மனத்தளாய் - மனமுடையவளாய். வன்னம் – அழகு. போதருவீர் - வருவீர்.

வரி 70 - 84 : பேரவை - பெரிய சபை. நொந்து - மனம் புண் பட்டு. நுவலாது - சொல்லாமல். மூங்கையர் - ஊமைகள். பாம்புக் கொடியவன் - துரியோதனன். பொற்றொடி - பொன்வளையலை யணிந்த திரௌபதி.

பயிற்சி வினாக்கள்

கம்பராமாயணம் :

1. இராமன் காடு செல்வதை அறிந்த தசரதன் என்ன சொல்லிப் புலம்பினான்.
2. இராமன் வள்ளல் தன்மையைத் தசரதன் எங்ஙனம் புலப் படுத்துகின்றான் ?
3. மென் தோல் மார்பின் முனிவன்யார் ? அவன் தசரதனை எவ் வாறு தேற்றினான்.
4. 'ஐயன் வரினும் வரும்'—யார் கூற்று ? இங்ஙனம் கூறியது ஏன் ?
5. தசரதன் தனக்கு நேர்ந்த சாப வரலாற்றைக் கூறிய விதத்தைச் சுருக்கி 20 வரிகளில் வரைக.
6. முனி குமாரனைத் தசரதன் கொல்ல நேர்ந்தது ஏன் ?
7. முனிமைந்தன் தன் வரலாறுபற்றித் தசரதனிடம் உரைப்பன எவை ?
8. ஈது ஊழின் செயல் - இடங்காட்டி விளக்குக.

9. முனி குமாரன் மன்னற் கிட்ட பணி யாது ?

10. தசரதன் கூறியவற்றைக் கேட்ட முனிவர் நிலையைத் தெரிவிக்க.

11. முனிவர் தசரதனுக்கிட்ட சாபம் யாது? அதனை ஏற்ற மன்னன் மகிழ்ந்தது ஏன் ?

பாஞ்சாலி சபதம் :

1. துரியோதனன் விதுரனுக்கிட்ட கட்டளை யாது ? அதற்கு விதுரன் சினங்கொண்டு கூறிய அறிவுரைகள் யாவை ?

2. 'சொல்லிவிட்டேன் இன்னொருகால் சொல்லேன்' என்று விதுரன் கூறியதென்ன ?

3. துரியோதனன் விதுரனை வெகுண்டு கூறியதென்ன ?

4. தேர்ப்பாகன் திரௌபதியிடம் சென்று என்ன தெரிவித்தான் ? அதற்குத் திரௌபதி அவனை என்ன கேட்டாள்.

5. திரௌபதி தேர்ப்பாகனிடம் கூறியதென்ன ?

6. திரௌபதியின் தனிமை நிலையை விவரிக்க.

7. தேர்ப்பாகன் துரியோதனனிடம் கூறியதென்ன ?

8. தேர்ப்பாகன் கூறியதைக் கேட்ட அவையோர் நிலை என்ன ?

9. துரியோதனன் தன் தம்பியிடம் என்ன கூறினான் ?

10. பின்வரும் உவமைகளை விளக்கி உவமேயம் தருக. (i) புள்ளிச் சிறுமான் புலியைப் போய்ப் பாய்வதுபோல், (ii) பிள்ளைத் தவளையைப் பெரும் பாம்பு மோதுதல்போல், (iii) பேய்கண்ட பிள்ளையென.

IV. சிறு நூல்கள்

1. மதுரைக் கலம்பகம்

மதுரைக்கலம்பகம்: மதுரையைப் பற்றிய கலம்பகம் என்னும் நூலாகும். கலம்பகமாவது, புய வகுப்பு அம்மானை சம்பிரதம் குறம் முதலிய பதினெட்டு உறுப்புக்கள் அமைய, பலவகைப் பாக்களினாலும் பாவினங்களினாலும் மடக்கு முதலிய சொற் பொருளணிகள் பொருந்தப் பலவகைச் சந்தங்களுடன் அந்தாதித் தொடையாகப் பாடப்படும் நூல்.

குமரகுருபரர்: இவர் பாண்டி நாட்டில் ஸ்ரீவைகுண்டத்தின் வடபாலுள்ள கைலாசபுரத்தில் சைவ வேளாள குலத்தில் சண்முக சிகாமணிக் கவிராயருக்குச் சிவகாமி அம்மையாரிடம் தோன்றியவர். ஐந்தாண்டு வரை ஊமையாக இருந்து முருகனருளால் பேசும் திறமும் பாடும் திறமும் பெற்றவர். இளமையிலேயே துறவுபூண்டு காசிவரை சென்று தமிழ் பரப்பியவர். திருப்பனந்தாள் மடத்தை அமைத்தவர் இவரே. இவரது காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு என்பர்.

மடக்கு

அரங்கம் ஐயற்கு வெள்ளிய ரங்கமே
ஆலயம்பிற வெள்ளிய ரங்கமே
உரங்கொள் பல்கலன் என்பர வாமையே
உணர்வுருமையும் என்பர வாமையே
விரும்பு பாடலு மாகவி மானமே
மேவு மானமு மாகவி மானமே
திருந்து தானந் தடமதிற் கூடலே
செயற்கை வெள்ளித் தடமதிற் கூடலே.

—குமரகுருபரர்.

அருஞ்சொற் பொருள்

மடக்கு: ஓரடியில் பல இடங்களிலாயினும் பல அடிகளிலாயினும் வந்த தொடர்களே மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது.

அரங்கம் - நடனசாலை. ஐயற்கு - சோமசுந்தரக் கடவுளுக்கு. வெள்ளி அரங்கம் - வெள்ளியம்பலம். பிற எள்ளியர் அங்கம் - சிவனையன்றிப் பிற பொருள்களை வெறுத்தவர் மனம்; அங்கம் - மனம். உரம் - வன்மை, மார்புமாம். கலன் + என்பு + அரவு + ஆமை. கலன் - ஆபரணம்.

உணர்வு+உருமையும்+என்+பரவாமை. = அன்பினால் இறைவன் அறிந்து கொள்ளாதிருப்பதும் எனது வழிபடாத்தன்மையே. மானம்+மா+கவியே-மானம் - பெருமை. கவி, நால்வர் பாடலைக் குறித்தது. மேவும் + (வி) மானமும்+மாக+விமானம் = விரும்பி வீற்றிருக்கும் விமானம் இந்திர விமானம். திருந்து தானம் - இயற்கையாகப் பொருந்தும் இருப்பிடம். தடமதில் கூடல் - பெரிய மதில்களையுடைய மதுரை. வெள்ளி+தடம்+அதில்+கூடல் : வெள்ளித் தடம்-வெள்ளிமலை. கயிலாயம். கயிலாயத்தில் இருத்தல் செயற்கை: மதுரையிலிருத்தல் இயற்கை.

2. திருக்குற்றாலக் குறவஞ்சி

திருக்குற்றாலக் குறவஞ்சி: திருக்குற்றாலத்தைப் பற்றிய குறவஞ்சி என்னும் நூல். குற்றாலம் - பாண்டி நாட்டுச் சிவதலம். குறவஞ்சி - குறப்பெண். குறத்தி ஒருத்தி தலைவனைப் பிரிந்த தலைவிக்குக் குறி கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது.

திரிகூடராசப்பக் கவிராயர்: இவர் பாண்டியநாட்டிலுள்ள மேலகரம் என்னும் ஊரில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர். சொற்சுவை பொருட்சுவை, பக்திச் சுவை ததும்பக் கவிகள் இயற்றுவதில் வல்லவர். இவரது காலம் 200 ஆண்டுகளுக்கு முன் என்பர்.

குறத்தி குறி சொல்லுதல்

என்னகுறி யாகிலுநான் சொல்லுவே னம்மே - சதுர்
ஏறுவேன் எதிர்த்தபேரை வெல்லுவே னம்மே
மன்னவர்கள் மெச்சுகுற வஞ்சிநா னம்மே - என்றன்
வயிற்றுக்கித் தனைப்போது கஞ்சிவா ரம்மே [வந்தால்
பின்னமின்றிக் கூழெனினும் கொண்டுவா அம்மே -
பெரிய குடுக்கைமுட்ட மண்டுவே னம்மே
தின்னவிலை யும்பிளவு மள்ளித்தா அம்மே - கப்பற்
சீனச்சரக் குத்துக்கிணி கிள்ளித்தா அம்மே

அருஞ் சொற்பொருள்

சதுர் - சபை (ஆகுபெயர்). **இத்தனை** - சிறிதளவு. **பின்னம்** - வேறுபாடு. **குடுக்கை** - வயிறு. **முட்ட** - நிறைய. **மண்டுவேன்** - குடிப்பேன். **இலை** - வெற்றிலை. **பிளவு** – வெட்டுப்பாக்கு. **சீனச் சரக்கு** - சீன தேசத்துப் புகையிலை. **துக்கிணி** - சிறிதளவு.

3. அழகரந்தாதி

அழகரந்தாதி : அழகரைப் பற்றி அந்தாதித் தொடையில் பாடப் பட்ட நூல். அழகர் - பாண்டி நாட்டில் திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியுள்ள திருமாலின் திருப்பெயர். அந்தாதி - அந்தத்தை ஆதி யாக வுடையது. அதாவது முன் செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர், அடி முதலியவற்றுள் ஏதேனும் ஒன்று அடுத்து வரும் செய் யுளின் முதலாக வரும்படி அமைத்துப் பாடுவது.

பிள்ளைப் பெருமாளையங்கார் : இவர் அழகிய மணவாளதாசர் என் னும் இயற் பெயரினர். சோழநாட்டில் வெண்மணி என்னும் பதியில் தோன்றிய வைணவ அந்தணர்; திவ்விய கவி என்னும் சிறப்புப் பெய ருடையவர். இவரது காலம் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் என்பர்.

அழகருக்கன்பு செய்

ஏத்துமின் பத்தியி னலெட் டெழுத்தும் இணையடிக்கே
சாத்துமின் பத்திரத் தண்ணந் துழாய் மதி தாங்கிக்கஞ்சம்
பூத்துமின் பத்தி செயும்பச்சை மாமுகில் போலழகர்
காத்துமின் பத்தி லிருத்தியும் வைப்பர் கருணை செய்தே.

—**பிள்ளைப் பெருமாளையங்கா**

அருஞ்சொற் பொருள்

ஏத்துமின் - துதியுங்கள். ஏத்தும் + இன் + பத்தியினல் என்றும் பிரிக்கலாம். எட்டெழுத்து: 'ஓம் நமோ நாராயணுய' என்னும் திருமந்திரம். இணையடிக்கு - இரண்டாகிய திருவடிக்கண் (உருபு மயக்கம்). பத்திரம் - இலை. மதி - சந்திரன். கஞ்சம் - தாமரை. மின்பத்தி - மின்னலின் வரிசை. இதில், இல் பொருளுவமை வந்துள்ளமைகாண்க.

பயிற்சி வினுக்கள்

1. கலம்பகம், அந்தாதி, குறவஞ்சி - இலக்கணம் வரைக.
2. சோமசுந்தரக் கடவுளுக்கு நடனசாலை, கோவில், ஆபரணம், இருப்பிடம் ஆகியவற்றைத் தெரிவிக்க.
3. விளக்குக: உணர்வுருமையும் என் பரவாமையே, மேவுமானமு மாக விமானமே, செயற்கை வெள்ளித் தடமதிற் கூடலே.
4. குறத்தி தன் திறமையைப் பற்றிக் கூறுவதென்ன? அவள் தலைவியிடம் கேட்பன யாவை ?
5. பிள்ளைப் பெருமாளையங்கார் கூறும் அறிவுரை யாவை ?
6. மதி தாங்கிக் கஞ்சம் பூத்துமின் பத்தி செய்யும் பச்சை மாமுகில் போலழகர் - விளக்குக. இதிலுள்ள அணி யாது ?

V. பல் சுவை

1. யானை மறம்

யானைமறம்; யானைகள் போர்க்களத்தில் செய்த வீரச் செயல்களைச் சிறப்பித்துக் கூறுவது. இச் செய்யுட்கள் முத்தொள்ளாயிரம் என்னும் நூலிலுள்ளவை: ஆசிரியர் வரலாறு அறிதற்கில்லை.

வீறுசால் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற எறிந்த பரிசயத்தால்—தேருது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கள்மேல் நீட்டுந்தன் கை. 1

கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு. 2

— முத்தொள்ளாயிரம்.

அருஞ்சொற் பொருள்

1. வீறுசால் மன்னர் – சிறப்பு மிக்க பகையரசர், தாமம் - முத்துச் சரங்கள். பாற - சிதற. பரிசயம் - பழக்கம். தேருது - தெளியாமல். மாக்கோதை - சேரமன்னன். களியானை - மத மயக்கமுடைய யானை. இச் செய்யுள் மயக்கவணி.

2. இற்ற - முறிந்த. கோடும் - தந்தங்களும், பிடி - பெண்யானை, பொல்லாமை நாணி - அழகற்று இருப்பதற்கு வெட்கமுற்று. புறங்கடை - வெளிவாயிலில். கல் ஆர்தோள் - மலை போன்ற தோள். கிள்ளி - சோழன். இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அணி.

2. படுகளத்தில் வீரர்

இச் செய்யுட்கள் கலிங்கப் போரில் விழுப்புண்பட்ட வீரர் நிலையையும், வீரமங்கை ஒருத்தியின் விருக்களையும் கூறுகின்றன. இவை கலிங்கத்துப்பரணி என்னும் நூலினின்று எடுக்கப்பட்டவை. இந்நூலின் ஆசிரியர் சயங்கொண்டார்.

விழுப்புண் பட்டிறந்த வீரர் நிலை

விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலு முகமலரு மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே யுண்ணப்
பதுமமுக மலர்ந்தாரைப் பார்மின் பார்மின். 1

வீர மங்கையின் வினா

பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே
போர்முகத்தி லெவர் வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே யெங்கே யென்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின். 2

—சயங்கொண்டார்

அருஞ்சொற் பொருள்

1. இனம் - கூட்டம். பதுமமுகம் - தாமரை போன்ற முகம். பார்மின் - பாருங்கள்.

2. பொரு - போர் செய்தற்குரிய. தடக்கை - பெரிய கை, மணி - அழகிய. புறம் – முதுகு. பயிரவி - காளி.

3. தென்றல் வருகை

தென்றல் - தெற்குத் திசையிலிருந்து வீசும் காற்று. இச்செய்யுளில் தென்றற் காற்றின் வருகை அழகாக வருணிக்கப்பட்டுள்ளது, இது திருவிளையாடற் புராணத்திலுள்ளது, இதனை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர்.

தென்றற் காற்றுச் சோலையில் உலாவுதல்

பொங்கரின் நுழைந்து வாவி
புகுந்துபங் கயம்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணம்கூட் டுண்டு
குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன் போல் இயங்கும் அன்றே!

—பரஞ்சோதி முனிவர்.

அருஞ்சொற் பொருள்

பொங்கர் - சோலை. வாவி - குளம். பங்கயம் - தாமரை. பசுமை+கடி - பைங்கடி; பசுமையும் மணமுமுள்ள. மயிலை - இருவாட்சி மலர். கொங்கு - தேன். கூட்டுண்டு - கலக்கப்பெற்று. கலைகள் - நூல்கள். தேரும் - ஆராய்கின்ற.

4. ஏரின் சிறப்பு

இச்செய்யுள் ஏரெழுபது என்னும் நூலினின்று எடுக்கப்பட்டது. இதனை இயற்றிவர் கம்பர் என்னும் புலவர் பெருமானவர்.

உழவர் பெருமை

கார்நடக்கும் படிநடக்குங் காராளர் தம்முடைய
ஏர்நடக்கு மெனிற்புகழ்சால் இயலிசைநா டகம்நடக்கும்
சீர்நடக்குந் திறம்நடக்குந் திருவறத்தின் செயல்நடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே.

—கம்பர்

அருஞ் சொற்பொருள்

கார் - மேகம். காராளர் - வேளாளர். இயல் - இயல் தமிழ். சீர் - சிறப்பு. பார் - உலகம்.

பயிற்சி வினாக்கள்

1. மாக்கோதையின் யானை திங்கள் மேல் கை நீட்டியது ஏன்? இச் செய்யுள் என்ன அணி?
2. கிள்ளிகளிறு புறங்கடை நின்றதற்கு என்ன காரணம் கூறப்பட்டுள்ளது? இதிலமைந்துள்ள அணியைக் காரணத்துடன் புலப்படுத்துக.
3. விழுப்புண் பட்டிறந்த வீரர் நிலை எங்ஙனம் வருணிக்கப்பட்டுள்ளது.
4. வீரமங்கை பயிரவியைக் கேட்பதென்ன? அவற்றால் நீவிர் அறிவதென்ன?
5. தென்றல் சோலையில் உலாவுதலை எங்ஙனம் ஆசிரியர் வருணித்துள்ளார்?
6. தென்றலை அறிஞரோடு ஒப்பிட்டுக் கூறுக.
7. ஏரின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

உரை மணி மாலை

1. பண்டை உரைநடை

பரிமேலழகர்

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத் தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள், வீடென்பது, சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாதலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப் படுவன ஏனை மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மநு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களில் வழுவா தொழுகுதல்.

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனதெனதென்றிருப்பார் அது காரணமாகத் தம்முண் மாறுபட்டு அப் பொருள்மேற்செல்வது. அது கடன்கோடன் முதலிய பதினெட்டுப் பதத்ததாம்.

தண்டமாவது அவ் வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்துதற் பொருட்டு ஒப்பநாடி அதற்குத் தக ஒறுத்தல்.

இவற்றுள், வழக்கும் தண்டமும் உலகநெறி நிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதி

பயத்தற் சிறப்பில வாதலானும், அவை தாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானும் தேயவியற்கையானும அறியப்படுத லானும், அவற்றையொழித்து ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறு பாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புக ளொழித்து எல்லார்க்கும் ஒத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலை யாற் கூறப்பட்டது.

அருஞ்சொற் பொருள்

இறையவர் - தேவர்கள். பதங்கள் - பதவிகள்; இடங்கள். நெறி யறிந்து — இது கொள்ளத்தக்க வழியென நல்லாசிரியர் வாயிலாக உணர்ந்து. சிந்தை-மனம். இலக்கண வகையாற் கூறப்படுவது-தண்ணீர் குளிர்ச்சியுடையது; தீ வெப்பமுடையது என்பதுபோலக் கூறுதல். மனு-மனுதரும சாத்திரம். வருணம்-சாதி. நிலை-ஆச்சிரமம். ஓதிய-சொல்லப் பட்ட. பதத்ததாம் - வகையினதாம். வழீஇயினரை-தவறினவரை. ஒப்ப நாடி-நீதி நூற்குத் தகுதியாக ஆராய்ந்து. ஒறுத்தல்-தண்டித்தல். பயத்த வாவதல்லது-பயனைத்தருவனவாதலல்லாமல். உறுதி-நன்மை. உணர்வு-அறிவு. தேயம்-தேசம். நால்வகை நிலை: பிரமசரியம், இல்லறம், வானப் பிரத்தம், சன்னியாசம்.

பயிற்சி வினாக்கள்

1. **மாந்தர்தம் சிறப்பு யாது? அவர்க்கு உறுதிதரும் பொருள்கள் யாவை?**
2. **வீட்டினைப்பற்றி நூல்கள் கூறுதது ஏன்?**
3. **அறமாவது யாது? அது எத்தனை வகைப்படும்?**
4. **ஒழுக்கம், வழக்கு, தண்டம்—விளக்குக. இவற்றுள் ஒழுக்கத் தையே அறமெனக் கொண்டது ஏன்?**
5. **ஒழுக்கத்தின் பொதுவியல்பு, சிறப்பியல்புகள் யாவை?**

2. செல்வம்

திரு. ந. ஆறுமுக நாவலர் அவர்கள்

செல்வமாவது இரத்தினம், பொன், வெள்ளி, நெல் முதலாயின. தருமத்துக்கும் இன்பத்துக்கும் துணைக்காரணம் செல்வம். இதுபற்றியன்றே மாணிக்கவாசக சுவாமிகள் 'முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான் முடியும்' என்றும், 'வறியாரிருமை யறியார்' என்றும் திருக்கோவையாரில் அருளிச் செய்தார்.

அழியாப்பொருளாகிய கல்வியையும் கல்வித் தேர்ச்சிக்கு உரிய புத்தகங்களையும் கொள்ளுதற்கும், பசி முதலியவைகளினால் வருந்தாது கவலையற்றிருந்து கல்வி கற்றற்கும், கற்ற கல்வியை அழகு செய்து தமக்கும் பிறர்க்கும் பயன்படுத்தற்கும் கருவி செல்வமே. கல்வியுடையவரும் வறியவராயின், பசி நோயினாலும் தீராக் கவலைகளினாலும் வருந்தித் தாம் முன் கற்ற கல்வியையும் மறந்துவிடுவர். வறியவர் மெய்ந்நூற் பொருளைத் தெளிய அறிந்து போதித்தாராயினும், 'நாம் இவர் சொல்லை விரும்பிக் கேட்போமாயின் கண்ணோட்டத்தினால் இவர் குறையை முடித்தல் வேண்டுமே' என்று பயந்து யாவருங் கேளாதொழிவர். ஆதலின், அவர் வாய்ச்சொல் பயனில் சொல்லாய் முடியும்.

செல்வமில்லாதவர், வறுமைத் துன்பமொன்றினால் மாத்திரமா, அத்துன்பம் மூலமாகச் செல்வர் வீட்டு வாயிலை நோக்கிச் செல்லுதற்றுன்பமும், அவரைக் காணுதற்றுன்பமும், கண்டாலும் அவர் மறுத்தபோது உண்டாகும் துன்பமும், மறாத விடத்தும் அவர் கொடுத்ததை வாங்குதற்றுன்பமும் அதனைக்கொண்டு வந்து போசனத்துக்கு வேண்டுமவைகளைக் கூட்டுதற் றுன்பமும் முதலிய பல துன்பங்களாலும் நாடோறும் வருந்துவர்.

எல்லா நன்மையும் உடையவராயினும், பொருளில்லாதவரை அவருடைய தாய் தந்தை மனைவி மைந்தர் முதலாயினவரும் அவமதிப்பர். ஒரு நன்மையும் இல்லாதவராயினும், பொருளுடையவரை அவர் பகைவரும் நன்கு மதிப்பர். வறிய

வரிடத்தே தாம் கொள்வதில்லாமை யன்றிக் கொடுப்ப துண்டாதலும் உடைமையால், அது நோக்கிச் சுற்றத்தார் யாவரும் கை விடுவர்.

கல்வியும், தருமமும், இன்பமும், கீர்த்தியும், மனித ருள்ளே பெருமையும், உறவும், நினைத்தது முடித்தலும், வென் றியுமாகிய எல்லாம் செல்வமுடையவருக்கே உண்டு. செல்வ மில்லாதவர் உலகத்திலே நடைப்பிணமாவர். ஆதலினால் யாவ ரும் செல்வத்தை இடையறா முயற்சியோடு வருந்திச் சம்பாதித் தல் வேண்டும்.

பொருள் சம்பாதிக்கும் நெறிகளாவன: வித்தை கற் பித்தல், உயிர்க்கு உறுதி பயக்கும் நூல்களையும் உரைகளையுஞ் செய்து வெளிப்படுத்தல், வேளாண்மை, வாணிகம், இராச சேவை, சிற்பம் முதலியவைகளாம். ஞான நூலை வேதனத் தின் பொருட்டுக் கற்பிக்கலாகாது; கற்பித்தவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்.

பொருள் சம்பாதிக்குமிடத்து, தரும நெறியாலே சம்பாதித்தல் வேண்டும். தரும நெறியால் வந்த பொருளே மேற்சொன்ன பயன்களெல்லாவற்றையுங் கொடுக்கும். களவு, பொய்ச்சான்று சொல்லல், பொய் வழக்குப் பேசல், பொய்ப்பத்திரம் பிறப்பித்தல், விசுவாசகாதகம், பரிதானம் வாங்கல், சுங்கங் கொடாமை முதலிய பாவ நெறிகளாலே பொருள் சம்பாதிக்கலாகாது. பாவ நெறியால் வந்த பொருள் முன்செய்த புண்ணியத்தையுங் கெடுத்து இம்மையிலே தீராத வசையையும், சந்ததி நாசத்தையும், இராச தண்டத்தையும், மறுமையிலே நரகத் துன்பத்தையும் பிறவித் துன்பத்தையும் விளைவிக்கும்.

காலந்தோறும் சம்பாதிக்கப்படும் பொருளை நான்கு பாகமாகப் பகுத்து, அவைகளுள், இரண்டு பாகத்தைத் தமது அனுபவத்துக்கு ஆக்கி, ஒரு பாகத்தை ஆஸ்தியின் பொருட் டுச் சேர்த்து, எஞ்சி நின்ற ஒரு பாகத்தைக் கொண்டே தருமஞ் செய்தல்வேண்டும். ஆஸ்தியின் பொருட்டுச் சேர்க்காது செல விட்டவர் பின்பு வியாதியினாலேனும் கிழப்பருவத்தினாலேனும்

பொருள் சம்பாதிக்கும் திறமை இல்லாதபொழுது பெண்டிர், பிள்ளைகளோடு வருத்தமடைவர். அக்காலத்திலே பெண்டிர் பிள்ளைகளும் அவரை உபசரியாது விடுவர்.

முதலிற் செலவு சுருங்கினல், பொருள் ஒரு காலத்தும் நீங்காது. முதலிற் செலவு சுருங்கக்கூடாதாயின், முதலுக்கொக்கவாயினும் செலவழித்தல் வேண்டும். எவனுக்கு முதலிற் செலவு மிகுமோ, அவன் வாழ்க்கை உள்ளது போலத் தோன்றி, மெய்ம்மையால் இல்லையாகிப் பின்பு அத்தோற்றமும் இல்லாமற் கெட்டுவிடும். வரவு செலவுக் கணக்கெல்லாம் அப்பொழுது அப்பொழுது சிறிதுந்தவருமல் எழுதிக்கொள்ளல் வேண்டும். கணக்கெழுதாமல் யாதொன்றுஞ் செய்யலாகாது. மாதந்தோறும் வரவு செலவு இருப்புக் கணக்குப் பார்வையிட்டு முடித்தல் வேண்டும்.

சம்பாதிக்கப்பட்ட பொருளிலே, அநுபவத்தின் பொருட்டும் தருமத்தின் பொருட்டும் செலவிட்டதொழிய எஞ்சி நின்றதைக் கொண்டு, தக்க பிரயோசனத்தைத் தருதற்குரிய விளை நிலம், தோட்டம் முதலியவை வாங்கல்வேண்டும். அல்லது முதற் பொருளுக்கும் வட்டிக்குங் குறைவுபடாத ஈட்டையும் தகுதியாகிய சான்றினையுமுடைய பத்திரத்தைபும் பெற்றுக் கொண்டு, வட்டிக்குக் கொடுத்தல் வேண்டும். கடனுடையவன் தம்மிடத்து வைத்த அசைக்கப்படு பொருளாகிய ஈட்டை, அவனுக்குக் கொடுக்குமளவும் கெடுதியுங் குறைவும் விகாரமும் பயனின்மையும் உரு மாற்றமும் அடையாமற் காத்தல் வேண்டும். அந்த ஈட்டைத் தாம் அநுபவித்தால் வட்டியில்லை. அநியாய வட்டியும், வட்டிக்கு வட்டியும் வாங்குதல் பெருங் கொடும் பாவம். தந்தை வழியாகவேனும், தாயினுடைய தந்தை முதலானவர்களின் வழியாகவேனும் வந்த பொருள் தாயம் எனப்படும். வித்தை கற்பித்தல் வேளாண்மை, வாணிகம், சிற்பம், சேவை முதலிய தொழில்களாலும், யாசனத்தாலும் அடையப்பட்ட பொருள் உடைமை எனப்படும். இவ்வுடைமைப் பொருளைத் தமதிச்சைப்படி தானம் முதலானவைகளாகச் செய்யலாம். பெண்ணின் பொருட்டுத் தந்தை முதலியவர்களாலே கொடுக்கப்பட்ட

பொருள் சீதனம் எனப்படும். சீதனப்பொருளைக் கணவனே னும் தந்தையேனும் உடன் பிறந்தாரேனும் கொள்ளுதற்கும் கொடுத்தற்கும் உரியரல்லர்.

பலவகைத் தொழில்கள் செய்து சீவனஞ் செய்யச் சக்தியுடையவர்களுள், அவை செய்யாது சோம்பேறிகளாய் இருந்து கொண்டு, அநேகர் நாணமின்றிப் பலரிடத்தும் சென்று யாசித்தும், அநேகர் தம் மனைவியருடைய சீதனப் பொருளையே கொண்டும், அநேகர் தாவர சங்கமங்களாகிய தாயத்தையும், சீதனத்தையும் ஈடுவைத்தும், விக்கிரயஞ் செய் தும் சீவனஞ் செய்கின்றார்கள். அறிவும் ஆண்மையும் மான மும் உடையவர்கள் இப்படிச் செய்வார்களோ? செய்யார்கள். கூழேயாயினும் தமது தொழின் முயற்சியாலே கிடைத்தது அமிர்தமே யாகும். பருப்பு நெய் பாயசம் வடை தயிர் முதலிய வற்றோடு கூடிய அன்னமே யாயினும், யாசனத்தினலாவது பிறருடைய தொழின் முயற்சியினலாவது கிடைத்ததாயின், அது விஷமேயாகும். தொழின் முயற்சிகள் சுயதேசத்திலே பலிக்காவிடின், இதர தேசங்களிலாயினும் சென்று, தாமே வருந்திச் சம்பாதித்துச் சீவனஞ் செய்தலே அறிவும் ஆண்மை யும் மானமும் உடையவருக்கு அழகு.

அருஞ்சொற் பொருள்

மூன்னுவ - கருதுவன. இருமை - இம்மை மறுமைப் பயன்கள். கண்ணோட்டம் - தாட்சிணியம். மருதவிடத்தும் - மறத்துரைக்காத போதும். போசனம் - உணவு. கீர்த்தி - புகழ். வேதனம் - ஊதியம். பொய்ச்சான்று - பொய்ச்சாட்சி. விசுவாச காதகம் - நம்பிக்கை மோசம். பரிதானம் - லஞ்சம்: கையூட்டு. வசை - பழி. சந்ததி நாசம் - பிள்ளைப் பேறில்லாமை. உருமாற்றம் - வடிவத்தை மாற்றுதல். யாசனம் - பிச்சை எடுத்தல். தாவர சங்கமம் – அசையாப் பொருள், அசையும் பொருள். விக்கிரயம் – விலைப்படுத்தல்.

பயிற்சி வினுக்கள்

1. செல்வத்தின் சிறப்பைப் பற்றி மாணிக்கவாசகர் கூறுவதென்ன?
2. செல்வமில்லாதவர் படும் துன்பங்களை விவரிக்க.
3. செல்வத்தை வருந்தித் தேடவேண்டும் - ஏன்?
4. பொருள் தேடும் நெறிகளையும் செலவிடும் முறைகளையும் பற்றி ஆசிரியர் கூறுவதென்ன?
5. பொருள் சேமிப்பு முறைகளின் சிறந்த வகைகளைப் பற்றித் தெரிவிக்க.
6. தாயம், உடைமை, சீதனம் - விளக்குக.
7. அறிவும் மானமும் உடையவர்க்கு அழகு எது?

3. வரலாறும் காவியமும்

டாக்டர் திரு. மு. வரதராசனுர், எம். ஏ., எம். ஓ. எல்.

ஓவியம் தீட்டுதல் ஒருகலை ; நிழற்படம் (photo) எடுத்தலும் ஒரு கலையே. இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன ? நிழற்படம் எடுப்பவன் உலகத்தில் நிகழ்வதையே படம் பிடிக்க முடியும் ; நிகழக் கூடியதைப் படம் பிடிக்க முடியாது ; நிகழ முடியாததையும் படம் பிடிக்க முடியாது. ஆனுல் ஓவியக் கலைஞன் உலகில் நிகழ்வது, நிகழக்கூடியது, நிகழ முடியாதது ஆகிய மூவகைப் பட்டவற்றையும் கலையுருவாக்கிக் காட்ட முடியும். எடுத்துக் காட்டாக : வேங்கை மரத்தில் மயில்கள் இயற்கையாக இருந்து மகிழ்வது உண்டு. அந்த இயற்கைக் காட்சியை நிழற்படம் எடுத்துக் காட்ட முடியும். ஆனுல் ஓவியக் கலைஞன் விரும்பினுல், வேங்கை மரத்தில் மயில் மகிழ்வதையும் காட்ட முடியும் ; அன்றித் தென்னை மரத்தில் மயில் ஆடுவதாகத் தீட்டவும் முடியும். அவ்வாறு தென்னை மரத்தில் மயில் ஆடுவதாகக் காட்ட முயலும்போது, அந்த கலைஞன் வாழ்க்கையோடு ஒட்டிய கற்பனைக் கலையைப் போற்றும் செம்மை மனம் உடையவனுனுல், அந்த தென்னை மரத்தையே குட்டையாக்கியோ முடமாக்கி வளைத்தோ மயில் ஏறி ஆடக் கூடியதாகச் செய்வான். வாழ்க்கையோடு ஒட்டாத போலிக் கற்பனையைப் போற்றும் மனம் உடையவனுனுல், அவன் நெடுக வளர்ந்த உயர்ந்த தென்னை மரத்திலும் மயில் ஏறி ஆடுவதாகப் படம் வரைய முனைவான்.

நிழற் படத்திற்கும் ஓவியத்திற்கும் உள்ள இந்த வேறுபாடு தான் வரலாற்றுக்கும் காவியத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

வரலாறு உள்ளதைக் கூற ஏற்பட்டது. காவியமோ உள்ளதைக் கூறுவதும் உண்டு ; உள்ளதைப் புனைவதும் உண்டு; இல்லதைப் புனைவதும் உண்டு. கற்பனையுலகில் பறக்காமல் உணர்ச்சி மிகாமல் ஒரு பற்றும் இல்லாமல்

எழுத வல்லவரே வரலாறு எழுத முடியும். கற்பனையுள்ளம் படைத்தவர் வரலாறு எழுதப் புகுந்தாலும் அது காவிய மாக மாறும்; கலையுணர்ச்சி இல்லாதவர் காவியமே எழுதப் புகுந்தாலும் அது வரலாறு போல் நிற்கும்.

பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்த பெரியோர்கள் வரலாறுகள் எழுதி வைக்காதது பெருங்குறை என்று இன்று பேசப்படு கின்றது. அது உண்மைதான். ஆனால், அவர்கள் என்ன செய்திருக்க முடியும்? அணியும் அணிகலன், உடுக்கும் உடை, ஆளும் கருவி, கட்டும்வீடு, உண்ணும் உணவு, செய்யும் தொழில் எல்லாவற்றிலும் கலையையே கண்டு கலையையே வாழ்வித்த பழந்தமிழ் மக்கள் வரலாற்றுத் திறன் இல்லாமல் வாழ்ந்ததில் வியப்பில்லை. பழந்தமிழ் மக்களின் மனம் கலை யுலகில் பறக்கும் பறவையாக இருந்தது; உலக நிகழ்ச்சிகளி லேயே ஊன்றி வேர் கொண்டு நிற்கவில்லை. பல நூற்றுண்டு கள் கழித்துத் தமிழ் நாட்டு அரசியலில் களேபரம் நிகழ்ந்து, வாழ்க்கையில் கலக்கம் ஏற்பட்ட பிற்காலத்தில் தான் கலை யுலகப் பறவை தன் வானத்தை விட்டு நிலம் நோக்கி வரத் தலைப்பட்டது; சிற்றூர்களின் நடை முறைகளையும் கல்லில் பொறித்து வைக்கும் வழக்கம் ஏற்பட்டது; அவ்வாறு அமைந் துள்ள கல் வெட்டுக்களே தமிழ் நாட்டுத் தொன்மையான வரலாற்றுப் பகுதிகளாகக் கூறப் படுகின்றன.

தமிழ் நாட்டுக்கு மட்டும் அல்லாமல், இவ்வுண் மை எல்லா நாட்டுக்கும் ஓரளவு பொருந்தும். பிறரோடு பழகுவதில் மிக வல்லவராய், உள்ளத்தில் உள்ளதை மறைத்து, உணர்த்தத் தக்கதை மட்டுமே பேச வல்லவராய், ஆளும் வகையில் தேர்ந்தவராய் விளங்கும் ஆங்கிலேயர்க்கும் இது ஓரளவு பொருந்துகின்றது. ஏன்? அவர்களானும் கலை யுள்ளத்தை அடியோடு துறக்கமுடியவில்லை. மெகாலே என் னும் ஆங்கிலேய அறிஞர் எழுதிய ஆங்கில நாட்டு வரலாறு பெயர் பெற்ற வரலாற்று நூலாகும். அதைப் பற்றியே ஒருவர், "படிக்கத் தக்க புனைகதை ஒன்று வேண்டுமென்று கேட்டால் மெக்காலே எழுதிய வரலாறு படிக்கலாம்" என்றூர், வரலாறு என்று எழுதப்பட்ட இக்காலத்து நூலின் நிலைமையே இது

என்ருல், அறிவு வளர்ச்சியைப் பெரிதாகப் போற்ருமல் உள்ளப் பண்பாட்டையே பெரிதாகப் போற்றிய பழந்தமிழ்க் கலைஞர்கள் தமிழ் நாட்டு வரலாறு எழுதியிருந்தால் என்ன ஆகியிருக்கும் ? வரலாருக மிற்காமல் காவியமாக மாறியமைந் திருக்கும் அன்ருே ?

இதற்கு ஒரு சான்றும் வேண்டுமோ ? புறநானூறு என்னும் சங்ககாலத் தொகை நூலில் உள்ள பாடல்களில் பெரும் பாலானவை வரலாற்றுப் பகுதிகளே. அவை இன்று வரலா ருக நின்றுள்ளனவா ? இல்லை ; சிறந்த கலைச் செல்வங்களாக வாழ்கின்றன.

நீண்டுயர்ந்த தென்னை மரத்தின் மேல் மயில் ஆடுதல் போன்ற இல்லது புனைதல் புறநானூற்றில் இல்லை. குறுகிய முடத் தென்னையின்மேல் மயில் ஆடுதல் போன்ற உள்ளது புனைதல் புறநானூற்றில் உண்டு. வேங்கை மரத்தின்மேல் மயில் மகிழ்ந்திருத்தல் போன்ற உண்மை நிகழ்ச்சிகளும் புற நானூற்றில் பல உள்ளன. ஆகையால், தமிழ் நாட்டுப் பழைய வரலாறு இல்லையேஎன்று வருந்துவோர், உண்மையை உள்ள வாறு அல்லது சிறிதளவு புனைந்து கூறும் பாடல்கள் உள்ளன என்பதை எண்ணி மகிழலாம்.

அங்கிலையிலும் ஒரு குறை தோன்றும். இந்தப் பாண்டி யன் இன்ன ஆண்டில் பிறந்தான், இத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தான், இன்ன ஆண்டில் உயிர் நீத்தான் என்னும் குறிப்புகள் இல்லாதபோது அது வரலாற்றுக்கு உதவுமோ என்று தயங்கலாம். வரலாறு என்பது தனி மனிதன் ஒருவ னுடைய பிறப்பு வாழ்வு இறப்பைப் பற்றிக் கூறுவது என்னும் கருத்துடையவரின் போக்கு அது. அரசனே ஆயினும் அவன் தனி மனிதனே. அந்தத் தனி மனிதனுடைய வாழ்வைவிட, அவனுடைய ஆட்சியில் இருந்த நாட்டின் நிலைமையைத் தெரி விப்பதே உண்மை வரலாறு என்று புத்துணர்வு பெற்றவர் புறநானூற்றைக் கற்று மகிழமுடியும்.

ஆம், வரலாறு என்பது நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் கூறுவது; புறநானூற்றில் அவ்வாறு இல்

லையே, அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிற்சில நிகழ்ச்சி களையே பாடியுள்ளனரே, இது குறையன்றோ எனக் கேட்க லாம். இதுவும் ஒரு குறையே! ஆயின் மிகச் சிறு குறை. நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் பிற்காலத்தார் அறிவ தால் பயனில்லை; நிகழ்ச்சிகளுள் புதியன சிறந்தன மாறியன மட்டும் அறிந்தால் போதும். எல்லாவற்றையும் காட்டுவது நிழற்படம்; வேண்டியவற்றை மட்டும் காட்டுவது ஓவியம். வேங்கை மரத்தையும் மயிலையும் பசும்புல் தரையையும் பின் னணியான மலையையும் மட்டும் தீட்டுவர் ஓவியக்கலைஞர்; அவர் உயிரும் உணர்வும் உள்ளவர்; தக்கவாறு அமைத்து அழகுறுத்தும் ஆற்றல் உள்ளவர். நிழற்படம் உயிரும் உணர் வும் அற்றது; உள்ள எல்லாவற்றையும் காட்டுவது; வேங்கை மரத்தின் கீழ் எப்படியோ வந்து சேர்ந்துள்ள மாட்டெலும்பை யும் படமெடுக்கும்; மற்றவற்றையும் படமெடுத்துவிடும். ஓவி யக் கலைஞரோ, தாம் உணர்த்த வேண்டிய உணர்வுக்கு அந்த மாட்டெலும்பும் பிறவும் வேண்டியிருந்தால்தான் தீட்டுவர்.

ஆங்கில அறிஞர் டாக்டர் ஜான்ஸனுடைய வரலாற்றை விடாமல் முழுதுமாகக் கூறியிருந்தால், இவர் நாள்தோறும் பல் துலக்கியது முதல் குளித்தல் உண்ணல் பருகல் வரையில் எல்லாவற்றையும் விடாமல் எழுதியிருக்கவேண்டும். அப்படி ஒரு நூல் எழுதியிருந்தால் அந்த நூல் இன்று வரையில் உயி ரோடு வாழ்ந்திருக்க முடியாது; வாழ்ந்திருந்தாலும் சிறந்ததாகப் போற்றிப் படிக்கப் படாமல் ஒதுக்கப்பட்டிருக்கும். அவருடைய வரலாறுகப் பாஸ்வெல் (Boswel) என்பார் எழுதிய 'வாழ்க்கை' என்னும் நூல் சிறப்போடு வாழ்கின்றது; வாழ்க்கை வரலாற்று நூல்களில் தலைசிறந்ததாகப் போற்றப் படுகின்றது. காரணம் என்ன? அந்நூலில் வேண்டாத பகு திகள் இல்லை; வேண்டியவை மட்டுமே உள்ளன. அறிஞர் ராபர்ட் லின்ட் என்பவர் கூறுவதுபோல் ஜான்ஸனுடைய வாழ்க்கையை எழுதிய பாஸ்வெல் அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளில் சுவையற்றவைகளை விட்டுச் சுவையானவற்றை மட்டும் அழகுபடத் தொகுத்திருப்பதாலேயே அது சிறந்ததாக விளங்குகிறது. புறநானூறும் அத்தகையதுதான்.

உண்மையாக வருந்தவேண்டிய காரணம் வேறு சில உள்ளன. பழந்தமிழ் நாட்டு நிகழ்ச்சிகளாகப் புலவர்கள் பாடியவை புறநானூற்றில் உள்ள நானூறு பாடல்கள் மட்டும் அல்ல. ஆயிரக் கணக்கான பாடல்களைக் கண்டு, அவற்றுள் மிகப் பலவற்றை வேண்டா என விட்டு நான்கு நூறு பாடல் களையே பிற்காலத்தார் எடுத்துச் சேர்த்தனர். அவ்வாறு தொகுத்தபோது அவருடைய கைக்கும் செவிக்கும் எட்டாமல் நாட்டு மூலை முடுக்குகளில் ஒதுங்கியிருந்து பிறகு கேட்பாரற்ற காலத்தில் காவிரி வெள்ளத்திற்கும் வையைப் பெருக்கிற்கும் பொருநை மிதப்பிற்கும் சென்றுவிட்டவை எத்தனையோ என்று எண்ணி வருந்த வேண்டியுள்ளது. தொகுத்தவர் காலத்தில் பயன் குறைந்தவை என்று அவர் தொகுக்காமல் தள்ளிவிட் டவை ஒருகால் இக்காலத்தினர்க்குப் பயன்படும் பாடல்களாக இருக்கக் கூடுமே, ஆகையால் அவர் அவற்றையும் வாழ வைத் திருந்தால் நலமாக இருக்குமே என்று மற்றொரு வகையாகவும் வருந்தவேண்டியுள்ளது. தொகுத்த அந்த நானூறு பாடல் களிலும் சில காணோமே, சிலவற்றில் இடையிடையே அடிகள் காணோமே என்று காப்பாரற்றுக் கழிந்த காலத்தை நினைந்து வருந்த வேண்டியும் உள்ளது. முழுமையாக உள்ள முந்நூற் றுச் சில பாடல்களையும் இன்றுள்ள தமிழர் பலரும் கற்றுப் போற்றவில்லையே எனபதை நினைக்கும்போதும் வருந்த நேர் கின்றது.

இவ்வாறு வருநதுவதே அல்லாமல் நிழற்படம் போல் தமிழ்நாட்டு வரலாற்றை விடாமல் காட்டும் வரலாற்று நூல் இல்லையே என்று வருந்திப் பயன் என்ன? நிழற்படம் என் பது ஒரு கருவி; அது தோன்றாத பழங்காலத்தில் ஓவியக் கலை ஒன்றே இருந்தது. அதனால்தான், இப்போது சென்னை, திருச்சிராப்பள்ளி, கோவை முதலிய ஊர்களின் பற்பல பகுதி களைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல், பழந்தமிழ்நாட்டு மதுரை, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம் போன்ற நகரங்களை யும் அவற்றின் அரிய உட்பகுதிகளையும் இன்றுள்ள நாம் எல் லோரும் காணுமாறு படங்கள் இல்லை. அத்தகைய படங்கள் இல்லையே என்று இன்று வருந்துவதில் பயன் இல்லை.

காட்சிகளைக் காத்துவைக்க நிழற்படம் உதவுவது போல், நிகழ்ச்சிகளைக் குறித்து வைக்க ஒரு கருவி இருந்தால் நல மாகும். நிழற்படம் குறித்த இடத்தில் உள்ளவற்றைவிடாமல் எடுத்துக் காட்டுவதுபோல், குறித்த காலத்தில் நிகழ்ந்த வற்றை விடாமல் எழுதிக்காக்கும் கருவி வேண்டும். செய்தித் தாள் இத்தகையது என்று கூறத்தகும். ஆனால் அதுவும் நிழற்படம் போன்ற கருவி அன்று; அந்தத் செய்தித்தாள், எழுதும் அறிஞரின் உள்ளத்து உணர்வும் கூடியே வெளிவரு கின்றது. நிகழ்ச்சிகளோடு ஆசிரியர் கருத்தும் கலக்க, சிறிது வேறுபட்ட வடிவமே பெறுகின்றது. 1942-ல் கல்கத்தாவின் தெருக்களில் நானூறு மக்கள் நாள்தோறும் பட்டினியால் மடிந் ததாக அங்கிருந்து வந்த மக்கள் கூறினர்; நாற்பது பேர் நாள் தோறும் மடிந்ததாகப் பத்திரிகைகள் எழுதின; நாலைந்துபேர் மெலிந்து சோர்ந்து உயிர் துறந்ததாக அரசாங்கம் தெரிவித் தது. பத்திரிகைகள் பயந்து எழுதுகின்றன என்றனர் பொது மக்கள். எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் வேண்டுமென்றே மிகைபட எழுதுவதாக அரசாங்கத்தார் குறை கூறினர். எது உண்மை? இன்னும் காணலாம்: ஓர் ஊரில் நடந்த கலகத் தைப் பற்றி ஒரு கட்சிப் பத்திரிகை ஒருவகையாக எழுதுகின் றது; அதையே மற்றொரு கட்சித்தாள் வேறு வகையாக எழுது கின்றது. ஆகையால் நிழற்படம் போன்ற உணர்வற்ற கருவி யாகப் பத்திரிகையைக் கருதமுடியாது. அத்தகைய கருவி வாய்க்கும் வரையில் வரலாறு குறைபாடு உடையதாகவே விளங்கும். ஆனால் காவியம் அத்தகைய குறை உடையதன்று; அதைக் கற்றுப் பயன் பெற முடியாதவர்களின் குறையே குறையாக உள்ளது.

வரலாறு உண்மையை உணர்த்துவது போலவே காவிய மும் உணர்த்துகின்றது. ஆயின், வரலாறு உணர்த்தும் உண்மை ஒருவகையானது. காவியம் உணர்த்தும் உண்மை மற்றொரு வகையானது. பாலின் சுவை வேறு; தேனின் சுவை வேறு. சுவை வேறாக இருத்தல் பற்றி, தேன் சுவையற்றது எனக் கூறலாகாது. காவியத்தில் உண்மை காணாதவர், இவ்வாறு தேனில் சுவை காணாதவரே ஆவர்.

அருஞ்சொற் பொருள்

ஓவியம் - சித்திரம். தீட்டுதல் - எழுதுதல். நிகழ்வது - நடப்பது புனைவது - அலங்கரிப்பது. அணிகலன் - ஆபரணம். வாழ்வித்த - வாழச் செய்த. களேபரம் - குழப்பம். பொறித்து - எழுதி. புத்துணர்வு - புதிய அறிவு. கழிந்த - சென்ற. மிகை - மிகுதி.

பயிற்சி வினுக்கள்

1. நிழற் படத்திற்கும் ஓவியத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
2. காவியம், வரலாறு - இவற்றின் வேறுபாட்டை விளக்குக. இவற்றை எழுதத் தகுதியுடையோர் யார் ?
3. பழந்தமிழ் நாட்டார் வரலாறு எழுதி வைக்காதது ஏன் ?
4. தற்காலத் தமிழ் நாட்டில் பழமையான வரலாற்றுப் பகுதிகள் எவை ?
5. பழந்தமிழ் மக்கள் வரலாறு எழுதியிருந்தாலும் அது காவிய மாகவே மாறி யிருக்கும் என்பதன் காரணமென்ன ? சான்று டன் விளக்குக.
6. புறநானூறு தமிழ் நாட்டுப் பழைய வரலாறு என்பதைப்பற்றி விளக்கி வரைக. (20 வரிகளில்)
7. வரலாறு குறைபாடுடையதாகவே இருப்பது ஏன் ?
8. வரலாறு காவியம் - இவற்றின் சிறப்பியல்கள் யாவை ?

---

4. தமிழர் கண்ட அரசர்

திரு. அ. ச. ஞானசம்பந்தம், எம்.ஏ.

இப் பரந்த உலகில் எங்கு மக்கள் முதன் முதலில் தோன் றினர்? இவ்வினுவிற்கு முடிவான விடை இதுகாறுங் கிடைத் திலது. நிலநூல் வல்லார் தமிழ்நாட்டுப் பாறைகளும், கல்லும் மிகப் பழமை வாய்ந்தவை என்று கூறுகின்றனர். எனவே, பழமை வாய்ந்த இந் நிலம் மிசப் பழங்காலத்தே, மக்கள் தன் பால் தோன்ற இட மளித்தது என்ருல் அதில் தவறு ஒன்றும் இல்லை. இப் பழைய சமூகம் நாளாவட்டத்தில் அனுபவம் பெற்று நாகரிகத்துடன் வாழக் கற்றுக்கொண்டது. கூட்டங் கூடி வாழக் கற்றுக்கொண்டதே இத் தமிழ் நாகரிகத்தின் முதற்படி என்னலாம். தனித்தனி மனிதனுக வாழ்கின்ற நாகரிகம் குறிஞ்சித் திணையில் என்ருல், கூட்டங் கூடி வாழத் தொடங்குகையில் மருதத் திணை தோன்றலாயிற்று.

கூட்டங் கூடினவுடன் புதுமுறை வாழ்வு புகுந்தது என்று கூறலாம். தனித்தனியாக வாழும்பொழுது தனக்குத் தான் வாழ்ந்த மனிதன் கூட்டங் கூடினவுடன் இந்நிலை மாறவேண்டியதன் இன்றியமையாமையை உணரத் தலைப்பட்டான்.

ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டவுடன் ஓரளவு இடர்ப் பாடுகளும் தோன்றலாயின. எவ்வளவு தூரம் தனி மனிதன் தன் உரிமையை இழக்கவேண்டும்-என்ற வினாவிற்கு விடை காண்பதில் மனத் தாங்கல் நிகழ்வது இயற்கைதானே? இத்தகைய இக்கட்டான சந்தருப்பங்களில் மனத்தாங்கல்கொண்ட இருவரும் ஒரு பொது மனிதனிடம் தங்கள் முறையீட்டைத் தெரிவிக்க வேண்டி நேரிட்டது. பலருஞ் சென்று முறையிடத் தகுந்த ஒருவன் யார்? எத்தகைய காரணங்களால் இத் தலைமைப் பதவி ஒருவனுக்குக் கிட்டியது? செல்வம் மிக்குள்ளவனே இத் தலைமைப் பதவிக்கு உரியவன் ஆயினன். இந்நிலை தோன்றுவதன் முன்னர் உடல் வலிவுடையவன் இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருந்திருப்பான். ஆனல், நாளடைவில் உடல் வன்மையுடைய பலரை வைத்து ஏவல் கொள்ளும் தகுதி வாய்ந்த ஒருவனே தலைவனகத் தகுதி பெற்றிருப்பான். மக்கள் செய்யும் செயல்கள் அனைத்திற்கும் அடிப்படையில் இருப்பது 'வயிறு' ஒன்று அல்லவா? எனவே, பசி தணிக்கும் செல்வம் உடையான் ஒருவன் பிறரை ஏவல் கொள்ளும் தன்மை பெற்றான் என்பதில் வியப் பென்ன? இன்னும் பணமுடையவர்களிடம் அறிவு நிரம்பியவர்கள் பலரும் ஏவல் செய்வது நாம் காணும் ஒன்றுதானே! ஆனல், அப் பழங்காலத்தில் எது செல்வமாகக் கருதப்பெற்றது? ஆதி மனிதன் காட்டில் வாழும் விலங்குகளைப் பிடித்துப் பழக்கித் தனக்கு உதவி புரிய வைத்துக்கொண்டான். அவ்வாறு அவன் கொண்ட பல விலங்குகளில் 'மாடு' முதலிடம் பெற்றது. பல காலம் வரையில் மாடு ஒன்றுதான் அவன் செல்வ நிலையைக் காட்டும் அறிகுறியாக இருந்து வந்தது. மனிதனுக்கு உணவு தந்து அவனுக்குப் பொதி சுமக்கவும் பயன்படும் இவ் விலங்கு வீட்டு விலங்குகளில் முதலிடம் பெற்றது இயற்கைதானே?

இத்தகைய மாடுகளை அதிகம் பெற்றவன் செல்வமுடைய வனுகக் கருதப்பெற்ருன். 'மாடு' என்ற தமிழ்ச் சொல்லுக் குச் 'செல்வம்' என்றே ஒரு பொருள் இன்றளவும் இருந்து வருகிறது. தமிழருக்குமட்டும் மாடு செல்வமாக இருந்தது என்பதில்லாமல் கிரேக்கருக்கும் அதுவே செல்வமாக இருந் தது எனச் சரிதநூல் வல்லார் கூறுவர். அம்மட்டோடு இல்லா மல் கிரேக்க மொழியில் முதல் எழுத்தாகிய 'ஆல்ஃபா' என் பதன் வரிவடிவம் மாட்டுக் கொம்பைப் பார்த்து எழுதப் பெற்றது என்றும் கூறுவர். பழந்தமிழ் இலக்கியத்தில் காணப்பெறும் போர் முறையும் இக் கருத்தை வலியுறுத்து கிறது. ஒரு மன்னன் மாற்ருன்மேல் படை எடுப்பதாயின் முதன் முதலில் மாற்ருனின் பசுக் கூட்டங்களைக் கவர்வதையே தொழிலாகக் கொண்டான். இது 'வெட்சித் திணை' என்று கூறப்பெறும். பின்னர், இது இலக்கிய வழக்காக நின்றுவிடி னும் ஆதிகாலத்தில் மன்னனுகக் கருதப்பெற்றவன் மாடாகிய செல்வத்தையே பெரிதும் நம்பி இருந்தான் என்பது வெள் ளிடைமலே.

பழந்தமிழ் இனத்தில் மாடுகளை நிரம்பப் பெற்றவனே மன்னனுகக் கருதப்பெற்ருன் என்று கூறுவதில் இழுக்கு ஒன்றுமில்லே. பசுவுக்குக் 'கோ' என்றதொரு பெயரும் உண்டு. எனவே, பசுக்களை மிகுதியாக உடைமையின் அரச னுகக் கருதப் பெற்ற ஒருவன் எவ்வாறு அழைக்கப்பெறு வான்? கோக்களை உடைமையின் 'கோன்' என்று கூறப் பெற்ருன் அரசன். 'கொற்றவர்தம் கோன் ஆகுவை' என வரும் மதுரைக் காஞ்சிச் சொற்றொடர் இப் பொருளை வலியுறுத் தல் காண்க. இப் பசுக்கூட்டங்களை வைத்து வளர்க்கும் பொறுப் புடையார் 'கோவலர்' என்றே பின்னர் அழைக்கப் பெற்றனர். ஆதியில் கோக்களை நிரம்பப் பெற்றிருந்தமையின் அரசனுகக் கருதிப் போற்றப்பட்ட ஒருவன் நாளாவட்டத்தில் இவ் வரசச் செல்வத்தைப் பரம்பரைச் சொத்தாகப் பெற்ருன் என்று அறிகிருேம். உலக முழுவதிலும் அரசச் செல்வம் பரம்பரைவழி வந்ததாகவே அறிகிருேம். கரிகாற் பெருவளத் தான் பிறப்பதற்கு முன்னரே அவன் தந்தை இறந்துபட்டதால் அவன் 'தாய் வயிற்றி லிருந்து தாயம் எய்தினன்' என்று

பொருநராற்றுப்படை குறிக்கிறது. இது காறுங் கூறியவற்றை அறுதியிட்டுச் சொல்லத் தக்க சான்றுகள் இன்றாயினும் இவ்வாறுதான் அரசு முறை தமிழ் நாட்டில் தோன்றி இருக்கும் என்று உய்த்துக் கூறுவதால் இழுக்கொன்று மில்லை.

தமிழர் கண்ட இவ் வரசனைப்பற்றி இனிச் சற்று விரிவாகக் காண்போம். பரம்பரையாக அரசச் செல்வம் இறங்கி வந்த காரணத்தால் தகுதியற்ற பலரும் அரசராயினரோ என்று நினைக்க வேண்டியதில்லை. பெரும்பான்மை யானவர் அனைத்துத் தகுதிகளும் பெற்றவராகவே விளங்கினர். இங்ஙனம் அவர்கள் இருக்கத்தக்க ஒரு காரணமும் உண்டு. தமிழ் நாடு மிகச் சிறிய பரப்புடையது. எனினும், இச் சிறிய நிலப் பரப்பைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடை வேந்தர் மூவர் ஆட்சி செலுத்தி வந்தனர். **“ நளியிரு முந்நீர் ஏணியாக, வளிஇடை வழங்கா வானம் சூடிய, மண்திணி கிடக்கைத் தண்தமிழ்க் கிழவர் முரசு முழங்குதானை மூவருள்ளும்”** என்ற புறப்பாடல் இவ் வுண்மையைக் கூறுதல் காண்க **‘வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறும்’** இந் நல்லுலகத்தை ஆட்சி செய்த மூவருந் தமிழரே யாயினும் இவர்களுள் ஒற்றுமை உணர்வு மருந்துக்கும் இல்லாத தொன்றாயிற்று. ஒற்றுமை யற்ற காரணத்தால் இம்மூவருள்ளும் ஓயாது பூசலும் போரும் நிகழலாயின. பழந் தமிழ் இலக்கியங்களாகிய ‘ பத்துப் பாட்டையும்’,‘ எட்டுத் தொகை’யையும் ஒரு முறை புரட்டினவரும் இவ்வுண்மையை உணராமலிரார். பல சந்தருப்பங்களில் இவருள் ஒருவர் கை யோங்கி ஏனைய இருவரையும் அடிப்படுத்தி இருந்தனர். இதன் விளைவாக அடிப்பட்டவர் தக்க காலம் வந்தவுடன் பழிவாங்கத் தவறுவ தில்லை. இம்மூவரை அன்றியும் பல சிற்றரசர்களும் உடன் இருந்ததாக இலக்கிய மூலம் அறிகிறோம். இச் சிற்றரசர்களும் ஓயாது தமக்குள் போரிட்டனர். சில சமயங்களில் பேரரசர்களுடன் சேர்ந்துகொண்டு ஏனையவருடன் போரிட்டுள்ளனர். இத்தகைய காரணங்களால் போர் புரிவதில் வல்ல ஓர் இனமாக இருந்து வந்துள்ளது தமிழ் இனம். ஓயாது போரில் வாழ்ந்து வந்தமையின் இவர்கள் இயற்கையின் ஒரு தள்ள வியலாத

நீதிக்குக் கட்டுப்பட்டனர். 'வாழ்க்கைப் போராட்டத்தில் வலியுடையவர் எஞ்சுவர்' என்ற 'டார்வின்' கொள்கைப்படி வலியுடையவர் எஞ்சினர். எஞ்சுவதற்கு வலிமை ஒன்றே துணையாக நின்றமையின் தமிழ் மன்னர் பெரும்பாலும் வலிமை மிக்கவராகவே இருந்தனர். யானையேற்றம், வில் வித்தை முதலியன அவர் நன்கு கற்றிருந்தனர்.

நாடு சிறிதாகலானும், போர் புரிந்து வெற்றி கண்டு எஞ்சுபவரே வாழத் தகுதியுடையாராக இருந்தமையானும் மன்னர் தமிழ் சிறந்த போர் வீரராகவே விளங்கினர். மிகப் பழங் காலத்தில் தத்தம்தகுதியாலும் பரம்பரை உரிமையாலும் அரசு கட்டில் பெற்றனர் தமிழ் மன்னர். எனினும் பிற்காலத்தில் இம்முறை தடுமாறித் தகுதி இல்லாதவருங்கூட உரிமை ஒன்றே பற்றிஅரசர் ஆயினர் என அறிகிறோம். சிலப்பதிகாரத்துக் காணும் 'அரசுவீற்றிருக்கும் திருப்பொறி யுண்டு' என்ற அடி ஒரு காலத்து இந்த உரிமைத் தன்மை பெரிதாகப் பாராட்டப்பெற்றது' என்பதையே குறிக்கிறது.

அரசச் செல்வம் பெறும் வகை எவ்வாறுயினும் பெற்ற செல்வத்தை இவ்வரசர் நன்கு அனுபவித்தனர். இவர்கள் வாழ்ந்த அரண்மனைகள் கோயில் என்ற பெயராலும் அழைக்கப்பெற்றன. கோன் வாழும் இடம் கோயில் என்று கூறப் பெற்றது பொருத்தம் உடையதே. '**சென்றான் அரசன் செழுங் கோயில் வாயில் முன்**' என இளங்கோ குறிப்பிடுதல் காண்க. இக் கோயிலை அமைக்கப் பெரும் பொருளும், பெருமுயற்சியும் செலவழித்தனர் என்பதை 'நெடுநல்வாடை' என்ற சங்கப் பாட்டால் அறிகிறோம். போரில் பெரும் பொழுதைக் கழித்தாலும் இம் மன்னர்கள் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற பேருண்மையை மறந்தாரல்லர். எனவே, அனுபவப்பொருள், போகப் பொருள் என்பனவற்றை வேண்டுமான அளவு அனுபவித்தனர் என்றும் அறிகிறோம். பாண்டியன் 'தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்' அரண்மனையில் அவன் மனைவி துயில்கொள்ளும் கட்டில்பற்றிய வருணனை, நக்கீரரால் 'நெடுநல்வாடை' என்ற நூலில் கூறப்படுகிறது. இத்துணை முன்னேற்ற முடைய காலத்தில் கூட அக்கட்டில் பற்றிய வருணனை நம்மைத் திகைக்க வைக்கிறது. பொரு

ளைப் பெற்றிருக்கும் திரு வேறு; அனுபவிக்கும் திரு வேறு. இற்றை நாளில் பொருள் பெற்றிருப்பார் பலரைக் காண்கிறோ மாயினும் அனுபவிப்பார் சிலரைக் காண்டலும் அரிதாகிறது. ஆனால், பழந்தமிழ் மன்னர் பொருளைப் பெறவும் அதனை நன்கு அனுபவிக்கவும் கற்றிருந்தனர் என அறிகிறோம். சிறந்த பொருளைப் பெறும் அவர்கள் 'முருகியற் சுவை' வாழ்க.

அருஞ்சொற் பொருள்

குறிஞ்சித்திணை-மலையும் மலைசார்ந்த இடமும். மருதத்திணை-வயலும் வயல் சார்ந்த இடமும். இடர்ப்பாடு-துன்பம். வெட்சி-ஒருவகை மலர். உய்த்து-ஊகித்து. புறப்பாடல்-புறநானூற்றுச் செய்யுள். பூசல்-சண்டை. எஞ்சுவர்-மிச்சப்படுவார். நளியிரு முந்நீர்-நீர் செறிந்த பெரிய கடல். ஏணி-எல்லை. திருப்பொறி-சிறந்த புண்ணியம். திரு - செல்வம். முருகு - அழகு.

பயிற்சி வினாக்கள்

1. தமிழ் நாகரிகத்தின் முதற்படி-எது? ஏன்?
2. குறிஞ்சித்திணை, மருதத்திணை-இவற்றின் தோற்றம் என்ன?
3. தலைமைப்பதவிக்கு உரியனானவன் யாவன்?
4. ஆதிகாலத்தில் மன்னன் மாடாகிய செல்வத்தை நம்பி இருந்தான்-சான்றுடன் விளக்குக.
5. தமிழ் நாட்டில் அரசு முறையின் தோற்றத்தைப்பற்றி ஆசிரியர் கூறுவதென்ன?
6. தமிழ் மன்னர் சிறந்த போர் வீரராக விளங்கக் காரணம் என்ன?
7. பழந்தமிழ் மன்னன் பொருளைப் பெறவும் அதனை நன்கு அனுபவிக்கவும் கற்றிருந்தனர் என்று எவற்றாலறியலாம்?

5. பாட்டும் பரிசும்

வித்துவான் திரு. கி. வா. ஜகந்நாதன், பி. ஓ. எல்.

முடத்தாமக் கண்ணியார் பாடல், புலவர் அவைக் களத்தில் ஏறிப் பாராட்டைப் பெற்ற பிறகு வேறு புலவர்கள் கரிகாலனுடைய புகழைப் பல வகையிலே பாடி அரங்கேற்றிச் சோழ மன்னன் வழங்கும் பரிசிலைப் பெற்றுச் சென்றார்கள். கடியலூரில் உருத்திரன் என்பவருடைய புதல்வராகிய கண்ணனார் என்பவர் சிறந்த தமிழ்ப் புலவராக விளங்கினார். அவரைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்று யாவரும் சொல்வார்கள். அவர் கரிகாலனைப் பற்றி ஒரு பெரிய பாட்டைப் பாடினார். காவிரிப்பூம்பட்டினம் வரவரச் சிறப்பு அடைந்திருப்பதைக் கண்டவர் அவர். அப் பட்டினம் வாணிகத்தினால் உலகில் உள்ள பல நாடுகளுடன் தொடர்பு கொண்டதாக விளங்கியது. தமிழ் நாட்டின் பண்டங்களையும் கரிகாலன் புகழையும் உலகெங்கும் பரப்புவதற்கு அந்தக் கடற்கரைப் பட்டினம் வாயிலாக இருந்தது. பட்டினம் என்பது காவிரிப்பூம் பட்டினத்தையே குறிக்கும்படியாக அதற்குச் சிறப்பு அமைந்தது.

அந்த நகரத்தின் பெருமையையும் செல்வ மிகுதியையும் வாணிகத்தையும் வாயாரப் பாடவேண்டுமென்று உருத்திரங் கண்ணனார் எண்ணினார். அதோடு கரிகால் வளவனுடைய வரலாற்றையும் அந்தப் பாட்டில் இணைக்க விரும்பினார். பல நாள் சிந்தித்து, "**பட்டினப் பாலை**" என்ற நீண்ட பாட்டை இயற்றி முடித்தார். 301 அடிகளைக் கொண்ட அந்தப் பாட்டு, காதலன் ஒருவன் சொல்வதுபோல அமைந்திருக்கிறது. இல்லறம் நடத்துவதற்குவேண்டிய பொருளைத் தேடும் பொருட்டுத் தன் காதலியைப் பிரிந்து செல்லலாம் என்று முதலில் அவன் நினைக்கிறான். பிறகு அவளைப் பிரிவது துன்பத்தைத் தரும் என்ற எண்ணம் உண்டாகிறது. அப்போது தன் நெஞ்சைப் பார்த்து, "காவிரிப்பூம் பட்டினத்தைப் பெற்றாலும், கரிகாலனுடைய வேலைக் காட்டிலும் வெம்மையான பாலை நிலத்தைக் கடந்து நான் வரமாட்டேன்; என்

னுடைய காதலியின் தோள் அம் மன்னனுடைய செங்கோலைவிடத் தண்மையை உடையது" என்று சொல்கிறான். இப்படிச் சொல்லும் போக்கில் காவிரிப்பூம் பட்டினத்தின் பெருமையையும், கரிகாலனுடைய புகழையுமே புலவர் விரித்துரைக்கிறார்.

சுக்கிரன் வடக்கே இருந்தால் மழை பொழியும் என்று சொல்வார்கள். அது தெற்கே சென்றால் மழையின்றிப் பஞ்சம் உண்டாகும். அவ்வாறு பஞ்சம் உண்டாகி, வானம் பாடி வானத்தை நோக்கி மழைத் துளிக்காக வாய் திறந்து டாடியும் நீர் கிடைக்காமல் அது வாட, பஞ்சம் உண்டானாலும் தான் பொய்யாமல் குடகுமலையிலிருந்து வருகின்ற காவிரி தன் நீரைப் பரப்பிப் பொன்னைக் கொழிப்பது சோழநாடு. அந்த நாட்டில் என்றும் விளைவு அறாத வயல்கள் பரந்திருக்கின்றன. சிறிய சிறிய ஊர்கள் பல, நாடு முழுவதும் வளப்பத்தோடு விளங்குகின்றன. கரும்பும் நெல்லும், தென்னையும் கமுகும், மஞ்சளும் சேம்பும், மாவும் பனையும், இஞ்சியும் வளர்ந்து நல்ல பயனைத் தருகின்றன.

அங்கங்கே மகளிர் நெல்லை உலர்த்துகிறார்கள். அந்த நெல்லைத் தின்னவரும் கோழியை ஓட்ட அருகிலே கல் இல்லை. வேறு யாதும் இல்லாமையால் தம்முடைய காதில் உள்ள குழையை வாங்கிக் கோழியின்மேல் எறிந்து ஓட்டுகிறார்கள். அந்தக் குழைகள் சிறு குழந்தைகள் விடும் கை வண்டிகளைத் தடுக்கின்றன.

ஒன்றுக்கு ஒன்று அருகருகாகப் பல ஊர்கள் நிறைந்தது சோழநாடு. பகைவர்களால் உண்டாகும் அச்சமே அவ்வூர் களில் இல்லை. அந்த நாட்டில் கடற்கரையில் விளங்குவது காவிரிப்பூம் பட்டினம்.

படகிலே உப்பைக் கொண்டு வந்து நெல்லுக்கு அதை விற்று, அந்தப் படகில் நெல்லை நிரப்பிக் கொள்கிறார்கள் பரதவர்கள். அந்தப் படகுகளைக் கழிகளின் பக்கத்தில் குதிரை களைப் போலக் கட்டியிருக்கிறார்கள். நகரத்துக்குப் புறம்பே

தோப்புகளும் பூஞ்சோலைகளும் செறிந்திருக்கின்றன. வலிமையைப் பெற்ற கரைகளையுடைய நன்னீர்ப் பொய்கைகள் இருக்கின்றன. அந்தப் பொய்கைகளில் பல நிறம் பொருந்திய மலர்கள் மலர்கின்றன. அவற்றுள் மிகப் பெரிய நீர் நிலைகள் இரண்டு உண்டு. அவற்றை இருக்காமத் திணை ஏரி என்று சொல்வார்கள்.

இந்த ஏரிகளுக்கு அப்பால் பலமான கதவுகளையுடைய மதில் ஓங்கி நிற்கிறது. அந்தக் கதவுகளில் சோழ அரசனுடைய புலிச் சின்னத்தைப் பொறித்திருக்கிறார்கள்.

நகரத்துக்குள்ளே புகுந்தால் முதலிலே கண்ணில் படுவது அன்னதானம் செய்யும் அறச் சாலை. அங்கே சோற்றை வடித்த கஞ்சி ஆற்றைப் போல ஓடுகிறது. அந்தக் கஞ்சியைக் குடிக்க வரும் காளை மாடுகள் தம்முள்ளே சண்டை போடுகின்றன. கஞ்சி பாயும் இடம் சேருகிவிடுகிறது. பிறகு அங்கே வண்டிகள் செல்வதனால் சேறு காய்ந்து புழுதி பரக்கிறது. அருகில் உள்ள மாடங்களிலே அந்தப்புழுதி படிகிறது.

இந்த அறச் சாலைக்கு அருகே பசுமாடுகளையும் எருதுகளையும் பாதுகாக்கும் சாலைகள் இருக்கின்றன. அவற்றினுள்ளே கேணிகள் உள்ளன. அப்பால் தவம் செய்பவர்களின் மடங்களும் முனிவர்கள் வேள்வி செய்யும் சாலைகளும் காளி கோயிலும் உள்ள இளமரச் சோலைகளைக் காணலாம்.

கடற்கரைப் பக்கத்தில் பரதவர் மக்கள் தமக்கு விருப்பமான ஊனைத்தின்றுவிட்டு அடப்பம் பூவைத் தலையிலே செருகிக் கொண்டு ஆட்டை முட்ட விட்டு விளையாடுகிறார்கள். காடை கவுதாரிகளைச் சண்டையிடச் செய்து பார்க்கிறார்கள். ஒருவரோடு ஒருவர் மற்போரும் வாட்போரும் செய்து விளையாட்டு அயர்கிறார்கள்.

பரதவர் தெருவில் உறைக் கிணறுகள் இருக்கின்றன. பன்றிகளையும் கோழிகளையும் அவர்கள் வளர்க்கிறார்கள். அமாவாசை நாளிலும் பௌர்ணமி யன்றும் கடலில் பரதவர் மீன் பிடிக்கப் போகாமல் தம்முடைய தெய்வமாகிய வருணனுக்குப் பூசை போடுகிறார்கள். தம் மனைவிமாருடன் சேர்ந்து

மீனின் கொம்பை நட்டு அதில் வருணனை எழுந்தருளுவித்து வழிபடுகிறார்கள். கூதாளம் பூமாலையையும் தாழம் பூவையும் சூடிப் பனங்கள்ளை உண்டு விளையாடுகிறார்கள். காவிரி கடலோடு கலக்கு மிடத்தில் தீவினை போகக் கடலாடிப் பிறகு நல்ல நீரில் குளிக்கிறார்கள்.

பெரிய வீதிகளில் பல மாடங்கள் இருக்கின்றன. வானுல கத்தைப் போன்ற இன்பங்களை உடையவை அவை. அங் குள்ள மகளிர் இரவில் இனிய பாடலைக் கேட்டும் நாடகங் களைக் கண்டும் நிலாவிலே இருந்து மகிழ்ந்தும் கள்ளை அருந் தாமல் உயர்ந்த மதுபானங்களை அருந்தியும் பட்டைக் களைந்து விட்டு மிக நுட்பமான துகிலை உடுத்தும் தம் கணவருடன் மகிழ்கின்றனர். அப்படியே அவர்கள் தூங்கிப் போகிறார்கள். மாடங்களில் ஏற்றிய விளக்குகள் விடியற்காலத்திலும் சுடர் விட்டு எரிகின்றன. இரவிலே மீன் வேட்டைக்காகச் சென்ற பரதவர்கள் அந்த விளக்கை எண்ணுகிறார்கள்.

பரதவர் வாழும் அகன்ற தெருவிலே பண்டசாலை இருக் கிறது. அங்கே கடுமையான காவலை அமைத்திருக்கிறார்கள். உள் நாட்டிலிருந்து வரும் பண்டங்களை அங்கே குவித்திருக் கிறார்கள். அவற்றிற்கெல்லாம் புலிப் பொறியையிட்டுச் சுங்கம் வாங்கிக் கப்பல்களில் வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள். அப்படியே கப்பலில் வெளிநாட்டிலிருந்து வரும் பண்டங் களுக்கும் முத்திரையிட்டுச் சுங்கம் வாங்குகிறார்கள். இந்தப் பண்டசாலையின் முற்றத்தே பல பண்டங்களையுடைய மூட்டை கள் மலையைப் போலக் குவிந்து கிடக்கின்றன. அவற்றின் மேல் நாயும் ஆடும் ஏறி விளையாடுகின்றன. சுங்கவரி தண்டும் அதிகாரிகள் நேர்மையுடன் தங்கள் கடமைகளைச் செய்கிறார் கள். அவர்கள் சிறிதும் சோர்வில்லாமல் வேலை செய்கிறார் கள். அளந்தறியாத பல பண்டங்கள் அங்கே கிடக்கின்றன. ஏவலர்கள் அவற்றைக் கப்பலிலிருந்து இறக்குகிறார்கள்; பல வற்றைக் கப்பலில் ஏற்றுகிறார்கள்.

திருமகள் களிநடம் புரியும் அங்காடி வீதிகளிலே உயர்ந்த மாடங்கள் இருக்கின்றன. திண்ணைகளும் படிக்கட்டுகளும் இடைகழியும் பல கட்டுகளும் உடைய மாடங்கள் அவை.

அங்கே அழகிய மகளிர் கடவுளை வணங்குகிறார்கள். குழல் அகவுகின்றது. யாழ் முரலுகின்றது. முழவும் முரசும் முழங்கு கின்றன. எப்போதும் விழா அறாத ஆவண வீதி அது. அங்கே பல வகையான கொடிகள் அசைகின்றன.

கடவுளைத் தொழும் கோயில்களில் ஒரு வகையான கொடி கள் அசைகின்றன. இன்ன இன்ன பண்டங்கள் இங்கே விற்கப்பெறும் என்பதற்கு அடையாளமாக நட்ட கொடிகள் அங்கங்கே இருக்கின்றன. பல நூல்களைக் கற்றும் கேட்டும் கரைகண்ட அறிவுடைய நல்லாசிரியர் தம்மோடு யாரேனும் வாதம் செய்வாருண்டானால் வருக என்று தம் வீட்டு வாயிலில் நாட்டிய கொடிகள் ஒருசார் அசைகின்றன. கடற்பக்கத்தைப் பார்த்தால் கப்பல்களில் உள்ள கூம்புகளில் கொடிகள் பறக்கின்றன. கள் விற்கும் இடத்தில் அதைக் குறிக்கத் தனியே கொடியை நட்டிருக்கிறார்கள்.

இப்படிப் பல கொடிகளும் கலந்து பல நிறங்களோடு விளங்கும் பட்டினத்தில் கப்பலில் வந்த அழகான குதிரை கள் ஒரு பக்கம் நிற்கின்றன. தமிழ் நாட்டிலிருந்து பிற நாட் டுக்குப் போகவேண்டிய மிளகு, மூட்டை மூட்டையாக அடுக்கி வைக்கப் பெற்றிருக்கிறது. இமயமலையிலே பிறந்த மணியும் பொன்னும் ஓரிடத்தில் விற்பனையாகின்றன. மேற்கு மலையிலே விளைந்த சந்தனமும் அகிலும் ஓரிடத்தில் கொட்டிக் கிடக்கின் றன. பாண்டி நாட்டுக் கடலிலே எடுத்த முத்தும் பவளமும் ஓரிடத்தில் பளபளக்கின்றன. கங்கைக் கரையிலே விளைந்த பண்டம் ஒரு பக்கம்; காவிரிக்கரையிலே விளைந்த பொருள் ஒரு பக்கம்; ஈழ நாடாகிய இலங்கையிலிருந்து வந்த உணவுப் பொருள் ஒரு சார்; காழகமாகிய பர்மாவிலிருந்து வந்த பண்டம் ஒரு சார்.

இவ்வளவு பண்டங்கள் நிறைந்து கிடக்கும் ஆவணத்தில் நேர்மையான முறையில் வணிகர்கள் வியாபாரம் செய்கிறார் கள். வேளாளர்கள் நடுநிலையோடு வாழ்கின்றனர். கொலை யும் களவும் இன்றி மக்கள் வாழ்கிறார்கள். பசுமாடுகளைப் பாதுகாக்கிறார்கள். புண்ணியச் செயல்களை இடையீடின்றிச் செய்து வருகிறார்கள்.

எங்கே பார்த்தாலும் வாணிகம். உலகில் உள்ள பண்டங்கள் அத்தனையும் இந்த அங்காடியிலே காணலாம். அது மாத்திரம் அன்று. உலகத்து மொழிகள் பலவற்றையும் இங்கே கேட்கலாம். அந்த அந்த நாடுகளிலிருந்து வந்து செல்லும் மக்கள் பலர் இங்கே உலாவுகிறார்கள். அவர்கள் தங்கள் மொழிகளிலே பேசிக் கொள்கிறார்கள்.

எப்போதும் விழா நிறைந்த வீதியாக விளங்குகிறது, ஆவண வீதி.

காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்பை எண்ணி முடிவு காண முடியுமா?

இவ்வாறு பூம்புகாராகிய பட்டினத்தைச் சிறப்பித்துப் பாடிய உருத்திரங் கண்ணனார் கரிகால் வளவனுடைய வீரத்தையும் பிற இயல்புகளையும் விரிவாகப் பாடினார். அவன் பகைவருடைய சிறையில் இருந்ததையும், அதனின்றும் விடுதலை பெற்று அரசுரிமையைப் பெற்றதையும், பல போரில் வெற்றி பெற்றதையும், ஒளியர், அருவாளர், வடநாட்டார், குடநாட்டார், பாண்டியன், பொதுவர், இருங்கோவேள் ஆகியவர்களைப் புறங் கண்ட சிறப்பையும் பாடினார்.

காட்டை அழித்து நாடாக்கிய நலத்தைப் புகழ்ந்தார். குளங்களை வெட்டி வளம் பெருக்கினான் கரிகாலன். உறையூரை விரிவாக்கி அங்கே அரண்மனையைக் கட்டிப் பல குடி மக்களைக் கொண்டு வந்து நாட்டினான். மதிலைக் கட்டி அங்கங்கே அம்புகளை வைக்கும் மறைவிடங்களை அமைத்தான். இவ்வாறெல்லாம் அவன் நகர நிர்மாணம் செய்ததையும் உருத்திரங் கண்ணனார் அழகாகப் பாடினார்.

பாட்டை நிறைவேற்றிய புலவர் கரிகாலனிடம் சென்றார்; பல புலவர் கூடிய அவையில் அதனைப் படித்து அரங்கேற்றினார். சோழநாட்டு வளத்தைக் கேட்டு மகிழ்ந்தார் பலர். பட்டினத்தின் சிறப்பைக் கேட்டுக் கேட்டு 'நன்று, நன்று' என்று கூறிப் பாராட்டினர் பலர். காவிரிப்பூம் பட்டினத்தின் அமைப்பைச் சித்திரிக்கும் பகுதிகளைப் புலவர்கள் யாவரும் கேட்டுக் கேட்டு இன்பக்கடலில் மூழ்கினர். அப்பால் கரிகால

னுடைய வீரப் புகழை விரிக்கும் பகுதியைக் கேட்டு வியந்தார்கள். அரங்கேற்றம் நிறைவேறியது.

புலவருக்குத் தூசும் துகிலும் மணியாரமும் அளித்தான் கரிகாலன். அவற்றோடு பதினாறு லட்சம் பொன்னைப் பரிசாக அளித்தான். "பாட்டுக்கு ஏற்ற பரிசு" என்று யாவரும் பாராட்டினார்கள்.

"பட்டினத்தின் புகழை இவ்வளவு சிறப்பாகப் பாடினவர் யாரும் இல்லை. அப்படிப் பாடிய புலவருக்கு இவ்வளவு மிகுதியாகப் பரிசளித்த மன்னனும் யாரும் இல்லை."

"உருத்திரங்கண்ணனார் வாக்கிலே பொன் கொழிக்கும் காவிரியைக் கண்டோம்; பொன் விளைக்கும் நிலத்தைக் கண்டோம்; பொன் வளரும் பட்டினத்தைப் பார்த்தோம். இத்தனையையும் பாடிய புலவரிடம் பொன் கொழிக்க வேண்டாமா? அதனால் அரசர்பிரான் இத்தனை பொன்னைப் பரிசாக அளித்திருக்கிறான்."

"புலவர் பாடிய பாடல் நெடுங்காலம் நிற்கும்; புரவலன் வீரமும் அவன் பதினாறு நூறாயிரம் பரிசளித்த புகழும் இந்தப் பாட்டோடு நெடுங்காலம் வாழும்."

இப்படிப் புலவர்களும் மற்ற மக்களும் பாட்டையும் பரிசையும் பற்றிப் பேசிப் பாராட்டினார்கள்.

அருஞ்சொற் பொருள்

இணைக்க - சேர்க்க. தண்மை - குளிர்ச்சி. கொழிப்பது - ஒதுக்குவது. கமுகு - பாக்கு. குழை - காதணி. கழிகள் - உப்புநீர்க் கால்வாய்கள். பொய்கை - குளம். சின்னம் - அடையாளம். பொறித்து - எழுதி. பரதவர் - செம்படவர். ஊன் - மாமிசம். அயர்கிறார்கள் - விளையாடுகிறார்கள். துகில் - உடை. அகவு - முரல். முழங்கு - ஒலி. ஆவணவீதி - கடைத்தெரு. கூம்பு - பாய்மரம். அங்காடி - கடை. நிர்மாணம் - அமைப்பு. தூசு - ஆடை. ஆரம் - மாலை.

பயிற்சி வினாக்கள்

1. முடத்தாமக் கண்ணியார், கடியலூர் உருத்திரங் கண்ணனார், பட்டினப் பாலை - குறிப்பு வரைக.
2. சோழநாடு, காவிரிப்பூம்பட்டினம் - இவற்றின் வளத்தைத் தெரிவிக்க.

3. காவிரிப்பூம்பட்டினத்து அறச்சாலை, பரதவர் வாழிடம், பண்ட சாலை - இவற்றின் சிறப்பைத் தெரிவிக்க.

4. ஆவண வீதியையும் அங்குள்ள கொடிகளையும் பற்றி நீவிர் அறிந்துள்ளவற்றை வரைக.

5. காவிரிப்பூம் பட்டினத்தில் நிறைந்துள்ள பல நாட்டுப் பண்டங்கள் யாவை?

6. கரிகால் வளவனுடைய வீரம், நகரமைப்பு ஆகியவற்றைப் பற்றித் தெரிவிக்க.

7. பட்டினப் பாலை பாடிய புலவர் பெற்ற பரிசில் யாது?

6. ஓவியக்கலை

திரு. கா. மு. இராமசாமி, பி. ஏ. எல். டி.

இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம் முதலியவை அழகுக் கலைகள் என்று அறிஞர் கூறுவர். இவற்றை நுண் கலைகள் என்றும் நுவலலாம். மக்களின் அறிவு முதிர்ச்சியே இக்கலைகளின் தோற்றத்திற்குக் காரணம். இயற்கையில் கண்ட இன்ப விருந்துகளை என்றும் அழியாமல் வைத்துச் சுவைத்து மகிழக் கண்ட முயற்சியின் பயன்களே இக்கலைகள் எனலாம்.

அழகுணர்ச்சிக்கு விருந்தாக உள்ளது கலையாகும். ஆனால், இயற்கையிற் காணும் வானம், கடல், மலை, ஆறு, சோலை, அருவி முதலியனவெல்லாம் கலையாகமாட்டா. இவற்றையே கைத்திறம் படைத்த ஒருவன் படமாக வரைந்து காட்டினால், அது கலையாகும்; கல்லிலோ மரத்திலோ செதுக்கி வடிவமாக்கிக் காட்டினால், அது கலையாகும். இவற்றுள் படமாக வரைவதையே **ஓவியம்** என்கிறோம்.

'ஓவியம்' என்பது செந்தமிழ்ச் சொல். இதனைச் சிறுமகாரும் பொருளுணர்ந்தோ உணராமலோ அரிய செயலைக் குறிக்க வழங்குவதைப் பலர் கேட்டிருக்கலாம். இது 'சித்திரம்' என்று இக்காலத்தில் வழங்குகிறது. பலவகை வண்ணங்களாலும், வட்டம் கோணம் முதலிய வடிவங்களாலும் அழகு பெற அமைக்கும் செயலே ஓவியமாகும்.

ஓவிய வல்லுநர்கள் தாம் எண்ணிய வடிவத்தைத் தீட்டுவதற்கு என்ன செய்கிறார்கள்? முதலில் பலகையிலோ, துணியிலோ கல்லிலோ பசையைப் பூசி அடிப்படை போடுகிறார்கள். பிறகு கரியினாலோ வேறு எதனாலோ தாம் எண்ணிய வடிவம் தோன்றும்படி வரிகளைப் போடுகிறார்கள். பின்னர் வரிகளை அழகாக அமைத்து வண்ணங்களைத் தீட்டுகிறார்கள். இவர்கள் கண்ணும் கருத்துமாய்த் தூரிகை கொண்டு தீட்டத் தீட்ட அழகிய வடிவம் காட்சியளிக்கிறது. இவ்வாறு வண்ணங்கள், இன்றி ஒரே நிறத்தில் ஓவியம் வரைவதும் உண்டு. ஆயினும் இயற்கையில் உள்ளவாறு காட்டுதற்கு வண்ணங்கள் இன்றியமையாதனவாகும். கடலைக் காட்டுதற்கு நீல நிறமும், மரத்தின் இலைகளைக் காட்டுதற்குப் பசுமை நிறமும் மலர்களைக் காட்டுதற்கு அவ்வவற்றின் நிறங்களும் இன்றியமையாதன வன்றோ?

சில கோடுகளால் ஒரு வடிவத்தை வரைந்து காட்டுவது எளிதான செயலென்று சிலர் எண்ணக்கூடும். ஓவியம் வரைவது அத்துணை எளியதன்று. இதற்கு உலக இயற்கையை உற்று நோக்கி யுணரும் நுண்ணறிவும், ஆர்வமும், மெய் வருத்தம் பாரா அரிய முயற்சியும் பல நாள் பழகிய பயிற்சியும், கலைப்பண்பும் வேண்டும். சில கோடுகளால் வடிவத்தைக் காட்டிவிடலாம். ஆனால். அது உண்மையாகவும், கண்டவர் மனத்தைக் கவர்ந்து வியப்பில் மெய்மறக்கச் செய்வதாகவும் இருந்தால்தான் உயிர் ஓவியமாகும்.

உயிர் ஓவியத்தின் நுட்பத்தை விளக்க ஒரு கதை சொல்வதுண்டு. ஓர் அரசன் இரண்டு ஓவியப் புலவர்களில் யார் சிறந்தவர் என்பதையறிய ஒரு போட்டியை ஏற்படுத்தினான். இருவரும் பழங்களோடு கூடிய ஒரு மரத்தை எழுதவேண்டும் என்று அவ்வரசன் தெரிவித்தான். அரசனின் விருப்பத்திற்கு உடன்பட்டு ஏழு நாட்களில் எழுதி முடிப்பதாகக் கூறிவிட்டு இருவரும் தத்தம் இல்லமேகினர்.

ஓவியர் இருவரும் ஒவ்வொரு நாளும் இரவுபகலாக மெய் வருந்தி யுழைத்து அரசன் குறிப்பிட்ட பழமரத்தை ஏழு நாட்களில் ஓவியமாகத் தீட்டி முடித்தார்கள். ஓவியம் நிறைவேறிய

செய்தியை யறிந்த அரசன், ஓவியத்தைக் காண்பதற்காகக் குறிப்பிட்ட நாள் காலையில் கலை நுட்பம் காணும் அறிஞர்கள் சிலரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு முதல் ஓவியன் இல்லத்தை யடைந்தான். அவனுடன் இரண்டா வது ஓவியனும் வந்திருந்தான்.

முதல் ஓவியன் ஓர் பழமர ஓவியத்தைத் தனதில்லத்தின் அறையினுள்ளே பலகணி யருகில் பாங்காக வைத்திருந்தான். பலகணியின் வழியாக வெளிச்சம்பட்டு ஓவியம் உயிர்பெற் றொளிர்ந்தது. வந்து பார்த்த அரசனும் மற்றவர்களும் ஓவி யத்தின் நேர்த்தியைக் கண்டு வியந்து மகிழ்ந்து தம்மை மறந்து நின்றார்கள். அப்பொழுது ஒரு குருவி பலகணி வழியே உள்ளே வந்து ஓவியத்திலிருந்த பழங்களைத் தின்பதற்காகக் கொத்திப் பார்த்து, அவை உண்மையான பழமல்லவென்று தெரிந்ததும் ஏமாறிப் பறந்து போய்விட்டது. அது உயிருள்ள ஓவியம் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண் டும்? அரசனும் அறிஞர்களும் ஓவியனைப் பாராட்டினார்கள். இரண்டாம் ஓவியனும் புகழ்ந்து போற்றினான். பிறகு யாவரும் தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர்.

அன்று பிற்பகல் எல்லோரும் இரண்டாம் ஓவியனின் இல்லம் சென்றனர். முதல் ஓவியனும் மகிழ்வோடு போனான். இல்லத்தினுள்ளே நுழைந்ததும், முதல் ஓவியன் வீட்டறையிற் கண்டதுபோலவே, பல கணியருகில் பழ மர ஓவியம் காணப் பட்டது. அதுவும் உண்மை மரம்போல் ஒளியில் திகழ்ந்து காட்சியளித்ததால் பார்த்தவர்கள் வியப்பும் மகிழ்வும்கொண்டு எது சிறந்தது என்பதை மதித்தறிய முடியாத நிலையில் மயங்கி நின்றனர். பழ மரத்தின்மீது ! ஒரு பறவை பறந்த வண்ணம் பழத்தைக் கொததிக் கொண்டிருந்தது இதை உற்று நோக்கிக் கொண்டிருந்த முதல் ஓவியன் ஆத்திரங் கொண்டு. 'இது பெரிய வஞ்சனை. குருவியின் காலில் நூலைக்கட்டிச் சட்டத் தோடு கட்டியிருப்பதால்தான் குருவி படத்தில் மோதிக்கொண் டிருக்கிறது. குருவி தானாக இங்கே வரவில்லை. என் படத்தில் குருவி வந்து பழத்தைக் கொத்தியதால், அதைப் போலவே காட்டுவதற்காக இச்சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. இது

நேர்மையன்று' என்று கத்தினான். அரசனும் மற்றவர்களும் மயக்கத்தினின்றும் தெளிந்து படத்தை உற்று நோக்கி, 'ஓவியர் சொல்வது உண்மைதான்' என்றார்கள்.

இரண்டாம் ஓவியன் புன் முறுவலுடன், "அரசே! குருவியைப் பிணைத்திருப்பது உண்மைதான். ஆனால், குருவி உண்மையன்று; அதுவும் ஓவியம்தான்!" என்று விளக்கினான். இதைக் கேட்ட யாவரும் வெட்கி வியப்பில் மூழ்கினார்கள்.

முதல் ஓவியத்தைக் கண்டு குருவிதான் ஏமாறியது. ஆனால், இரண்டாவது ஓவியத்தைக் கண்டு மனிதர்கள்கூட ஏமாறிவிட்டனர்! அது மட்டுமா? ஓவியக் கலையில் தேர்ந்த ஓவியனே ஏமாறிவிட்டானன்றோ? இத்தகைய உயிரோவியத்தைத் தீட்டிய இரண்டாம் ஓவியனே சிறந்தவனென்று அரசனாலும் அறிஞராலும் போற்றப்பட்டானென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

உலகில் எத்தனையோ வகையான இன்பந்தரும் இயற்கைக் காட்சிகள் இருக்கின்றன; வியப்பளிக்கும் அழகிய பொருள்கள் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் அறிவுக் கண்கொண்டு நோக்கி அகமகிழலாம். அவ்வியற்கைக் காட்சிகளையும், அழகுப் பொருள்களையும் கண்டவாறே ஓவியமாகத் தீட்டினால், உள்ளம் கலையின்பத்தில் களிப்படையும். தொடக்கத்தில் செம்மையுற அமையாவிடினும் நாளடைவில் கைத்திறம் பெற்றுச் செம்மையுறும் என்பதில் ஐயமில்லை. 'சித்திரமும் கைப்பழக்கம்' என்பது ஔவையின் அமுத மொழியன்றோ?

ஒவ்வொரு நாட்டினரும் ஓவியக் கலையைப் பெரிதும் விரும்பிப் பயின்று தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். பண்டைத் தமிழகத்தில் ஓவியக்கலை உயர்வு பெற்றிருந்தது என்று தெரிகிறது. மணிமேகலை நூலாசிரியராகிய சீத்தலைச் சாத்தனார் தமது நூலில் 'ஓவியச் செந்நூல்' என்ற ஒரு நூலைக் குறிப்பிடுகிறார். பண்டையரசர் மாளிகைகளில் பலவகைச் சித்திரங்கள் திகழ்ந்திருந்தன; ஆடைகளில் பலவகைச் சித்திர வேலைப்பாடுகள் மிளிர்ந்தன. இவை போன்ற செய்திகளால் ஓவியத்தை எக்காலத்திலும் மக்கள் விரும்பினார் என்பதை உணரலாம்.

வடநாட்டில் உள்ள அஜந்தா, எல்லோராக் குகைக் கோயில்களில் அழகிய ஓவியங்கள் பல விளங்குகின்றன. முதல் இராசராச சோழன் அமைத்த கலைக் கோயிலாகிய தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தின் சுவர்களில் வண்ண ஓவியங்கள் உயிர் பெற்று நின்று காண்பவர் மனத்தைக் கவர்கின்றன. திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே இருபது கல் தொலைவில் உள்ள சித்தன்ன வாசல் என்னும் சிற்றூரின்கண் விளங்கும் குகைக் கோயிலில் தாமரை மலர்கள், மாடுகள், யானைகள், எருமைகள், அன்னப் பறவைகள், குளத்தில் சிலர் மலர் பறிக்கும் காட்சி முதலிய பல ஓவியங்கள் சிறந்த நிலையில் உள்ளன. தூண்களில் உள்ள நடன மாதர், அரசன், அரசியர் அழகிய நிலையில் காட்சி யளிக்கின்றனர். இவ்வாறே செந்தமிழ் நாட்டுக் கோயில்கள் பலவற்றில் எத்தனையோ வகையான அழகிய ஓவியங்கள் கலை விருந்தளிக்கின்றன.

தமிழகத்தில் பல்லவ மன்னர்கள் காலத்திலேயே வண்ண ஓவியங்கள் சிறந்த நிலையை எய்தியிருக்கின்றன. மலையைக் குடைந்து குகை செய்து சுவர்களைச் சமப்படுத்தி உமியும் புல்லுங்கொண்டு செய்யப்பட்ட ஒருவகைச் சாந்தைப் பூசுவார்கள். அதன்மேல் சுண்ணும்பும் மணலுங் கலந்த சாந்தை அரைக்கால் அங்குல கனத்தில் பூசிக் காய வைப்பார்கள். பிறகு, பலவித வண்ணங்களால் ஓவியந் தீட்டுவார்கள். இவ்வகையில் தீட்டப் பெற்றவையே சித்தன்னவாசல் ஓவியங்கள். அஜந்தா ஓவியங்களை விடச் சித்தன்ன வாசல் ஓவியங்களே உறுதியுடன் அமைந்தவையென்று ஆராய்ச்சியாளர் அறிவிக்கின்றனர்.

மலையாள நாட்டினராகிய இராஜா இரவிவர்மா என்பவரின் ஓவியங்கள், உலகப் பெரும்புகழ் கொண்டவை. இவர் தீட்டிய ஓவியங்கள் பல இக்காலத்திலும் தமிழ் நாட்டு இல்லங்களில் அழகு செய்து விளங்குவதைக் காணலாம். இரவிவர்மா, மிக நுட்பமாக ஓவியம் தீட்டிய திறமையால் அரசர்களாலும் செல்வர்களாலும் பாராட்டப் பெற்று உயர் நிலையடைந்து புகழ் பெற்றூர். 'ஓவியர்மணி' என்று இவரைப்

பாராட்டிப் பாரதியார் பாடல் இயற்றியிருக்கிறார். இவர் போன்ற ஓவியர்கள் பலர் உண்டு.

இக்காலத்தில் ஓவியக் கலை மறுமலர்ச்சியுற்று வளர்ச்சி யடைந்து வருகிறது. நூல்களிலும், பத்திரிகைகளிலும் எண் ணிறந்த வண்ண ஓவியங்கள் மிளிர்கின்றன. ஓவியம் தீட்டு வதையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட பலர் மிகத் திறம் படைத்தவர்களாய் ஓவியக் கலையை வளர்த்து வருகிறார் கள். இளைஞர்கள் பலர் ஓவியந் தீட்டுவதில் பேரார்வங் கொண்டு ஊக்கத்துடன் முனைந்திருக்கின்றனர். சித்திரக் காட்சிகள் ஆங்காங்கே நடைபெற்று, ஓவியக் கலைக்குப் புத்துயிரளித்து ஊக்க மூட்டுகின்றன. இவையெல்லாம் ஓவியக் கலையின் உயர்வையுணர்ந்த நற்செயல்களாம்.

ஓவியந் தீட்டுவோனின் உள்ளம், தன் செயலில் நிலைத்திருப்பதால், மனம் சிதறாமல் ஆற்றலடைகிறது. அவன், தான் எண்ணிய வடிவம் உருப்பெறுகிற வரையில் ஏற்ற வண்ணத்தை மாற்றி மாற்றி யெழுதிப்பொழுது கழிவதும் தெரியாமல் இருப்பதால், அவன் மனம் பொறுமையில் பண் படுகிறது. இயற்கையை எண்ணி யெண்ணிச் செயற்கையில் காட்டும் முயற்சியால், அவன் அறிவு மலர்ந்து விரிவடைகிறது. இயற்கையைப் படைக்கும் இறைவன்போல், ஓவியன் செயற் கையைப் படைத்து இன்பமெய்துகிறான். இத்தகைய நன்மை யும் இன்பமும் நல்கும் ஓவியக்கலையில் இளைஞர்கள் ஆர்வ மும் ஊக்கமும் கொள்வது நன்றன்றோ?

அருஞ்சொற் பொருள்

சிறுமகார் - சிறுவர்கள். வண்ணம் - நிறம். தீட்டுதல் - எழுதுதல். தூரிகை- எழுதுகோல். ஆர்வம் - ஆசை. இல்லம்-வீடு. திகழ்ந்து-விளங்கி, பிணைத்து - கட்டி. பேரார்வம் - பேராசை.

பயிற்சி வினாக்கள்

1. அழகுக் கலைகள் என்பன யாவை? எவை கலையாக மாட்டா?
2. ஓவியம் என்பது யாது? இதற்குள்ள வேறு பெயர் என்ன?
3. ஓவியர் எவ்வாறு ஓவியம் தீட்டுகின்றனர்?
4. ஓவியம் வரைவதற்கு ஒருவனிடம் எவை பொருந்தி யிருக்க வேண்டும்?

5. உயிர் ஓவியத்தின் நுட்பத்தை விளக்கும் கதை யாது ?
6. 'சித்திரமும் கைப்பழக்கம்' என்பதால் அறிவதென்ன?
7. பண்டைத் தமிழ் மக்கள் ஓவியக் கலையில் விருப்பம் உடையவர்கள் என்பதை எவற்றால் அறியலாம் ?
8. நம் நாட்டில் எங்கெங்கே ஓவியங்கள் சிறந்து விளங்குகின்றன ? சித்தன்னவாசல் ஓவியங்களின் சிறப்பென்ன?
9. ஓவியர்மணி யார் ? அவருடைய சிறப்பு என்ன ?
10. ஓவியக்கலை எவ்வாறு மறுமலர்ச்சி பெற்றுள்ளது ?
11. ஓவியக்கலை நன்மையும் இன்பம் எவ்வாறு நல்குகிறது ?

7. பாரதியும் பெண்மையும்

திருமதி. ர. இராசாமணியம்மையார், எம். ஏ.

புலவர்கள் தாங்களியற்றிய காவியங்களில் பூமி, நதிகள், விண்மீன்கள், எண்வகைச் செல்வம் முதலிய அனைத்தையும் பெண்களாக வர்ணித்துள்ளனர். சமணர்களோ இன்னும் ஒருபடி அதிகமாகவே சென்றுவிட்டனர். ஏனெனில், அவர்கள், வீட்டுலகையும் பெண்ணாகவே பாவித்து "கைவல்ய மடந்தை" என அழைக்கின்றனர். அவ்வாறே அமரகவி பாரதியார், கண்ணனைக் "கண்ணம்மா" என்கிறார். மேலும், கொற்றவை, நாமகள், பூமகள் முதலிய பெண் தெய்வங்கட்கு வணக்கஞ் செலுத்தியிருப்பதுடன், புதுமைப் பெண்ணைப் பற்றியும் கூறியுள்ளார். மற்ற புலவர்கள் பெண்களை வர்ணித்திருப்பது வெறும் கற்பனை. ஆனால பாரதியாரோ பெண்களின் பழங்காலநிலை, இடைக்கால நிலை, அவர்களிடமுள்ள குணங்கள், அன்னார் செய்யக்கூடிய காரியங்கள் முதலியவற்றைப்பற்றி விளக்கிக் கூறுகிறார். ஔவை பிறந்த நாட்டிலா அறிவுக்குப் பஞ்சம் என அங்கலாய்க்கிறார். அவர் ஔவையை உதாரணமாகக் கூறியதற்குக் காரணம் அவரிடமுள்ள அரசியல் வன்மை, புலமை, வீரம் முதலிய சிறந்த பண்புகளாகும்.

கல்வித் தெய்வம் கலைமகளாயிருக்க, பெண்கள் ஏட்டைத் தொடுவது கூடாது என்று வீட்டுக்குள்ளேயே அவர்களைப்

பூட்டி வைப்பதன் பொருளென்ன? "பிச்சை புகினுங் கற்கை நன்றே" "எண்ணெழுத் திகழேல்" என்னும் அறிவுரைகள் பெண்களை விலக்கிக் கூறப்பட்டவையல்லவே. இடைக்காலத்தில் எழுந்தது "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?" என்னும் எதுகை, மோனை நயத்துடன் கூடிய பழமொழி. அதைப் பல பெற்றோர் ஆமோதித்து, பெண்கள் படிப்பதற்கு அருகதையற்றவர் என்றும், இசை, நடனம் முதலிய கலைகள் பொது மகளிருக்கே உரியனவென்றும் கூறி, அவர்களது அறிவு வளர்ச்சியைத் தடுத்தனர். அதனால் கலை வளர்ச்சியும் தடைப்பட்டது. பெண்கள் வெளியில் வரலாகாது; தமது எண்ணங்களை வெளியிடவும் அவர்களுக்கு உரிமையில்லை; ஆணுக்குப் பெண் அடிமை; இல்லத்திலுள்ள ஏனையோருக்கும் அவள் அடிமை; பணங்கொடுத்து வாங்கிவந்த மாட்டைத் தொழுவத்தில் கட்டியதுபோல் அவர்களைக் கட்டுப்படுத்தி யிருக்கிறார்களென்றும், எப்போதும் அவர்கள் மாடு போல் உழைத்து அடிபட்டும் வருவதாயும், அந்த நாள் மலை யேறிவிட்டதென்றும், "ஆணின்றிப் பெண்ணில்லை, பெண்ணின்றி ஆணில்லை," இருவரும் சமம் என்றும், ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார் என்றும் கூறுகின்றார் கவிஞர்.

நாயினிடம் யோசனை கேளாமலே யார் அதிகவிலை கொடுக்கிறார்களோ அவர்களுக்கு அதை விற்பதைப் போல், பெண்களையும் பிள்ளை வீட்டாரிடம் பணம் பெற்றுக் கொண்டு விற்கிறார்கள். சில ஜாதிகளில் பிள்ளைவீட்டாரும், மற்றும் சில ஜாதிகளில் பெண் வீட்டாரும் பணம் கொடுக்கும் வழக்கம் இருந்துவருகிறது. பெண்களை நாய்போல் கேவலமாக மதித்து, அவர்களைக் கொல்ல மனமின்றி, விற்பனை செய்கின்றனர் பெற்றோர். இதனை,

> "நல்லவிலை கொண்டு நாயை விற்பாரந்த
> நாயிடம் யோசனை கேட்ப துண்டோ.
> கொல்லத்துணிவின்றி நம்மையு மந்நிலை
> கூட்டிவைத்தார்"

என்னும் அடிகளால் குறிப்பிடுகின்றார்.

அடுத்தபடியாக, பெண்களை வற்புறுத்திக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம் என்கிருர். அக்காலத்தில் சுயம்வரம் இருந்து வந்தது. வில்லை வளைக்கும் வீரனையோ, அம்பையெய்யும் அதிசூரனையோ, ஏறுதழுவும் இளைஞனையோ ஒரு கன்னி கணவனுக ஏற்றுக்கொள்வாள். தனக்கேற்ற கணவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு பெண்ணைச் சார்ந்தது. போட்டியில் வெற்றி பெறும் வீரனே, வாழ்க்கைப் படியில் அடி வைப்பதற்கு அருகதையுள்ளவன். ஆனல், இடைக் காலத்தில் மணவிஷயத்தில் பெண் குறுக்கிடலாகாது உனது நன்மையைக் கோருபவர்களன்றே நாங்கள் என்று பெற்றேர் கூறி, கல்வியறிவற்றவனுக்கும், வயது சென்றவனுக்கும், பிணியாளனுக்கும், ஒழுக்கந் தவறியவனுக்கும் மணஞ் செய்து கொடுக்கின்றனர். ஏனெனில் பணந்தான் அவர்களுக்குப் பிரதானம். நிலையற்ற செல்வத்தை நம்பிச் செய்த காரியத்துக்காகப் பின்னல் அவர்கள் வருந்தவும் நேரிடும். பழந்தமிழிலக்கியத்தை நோக்குமிடத்து, குணம், குலம், கல்வி போன்ற 'பத்து அம்சங்களில் ஒத்திருப்பவனுக்கே பெண் கொடுத்தனர் என்பது நன்கு விளங்கும்.

பாரதியார் படைத்துள்ள புதுமைப் பெண் எப்படிப்பட்டவளென்று பார்ப்போம்.

1 "நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"

2. "ஞான நல்லறம் வீரசுந்தரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்"

இந்த நற்குணங்களால் அவர்கள் தீயவழியில் செல்லுவதில்லை. அச்சம் குடிகொண்டால், பொந்தில்தான் வாழவேண்டும். முன்னணிக்கு வர இயலாது.

பிறகு, அன்னுர் செய்யக்கூடிய காரியங்கள் என்னென்னவென்று கூறுகிருர். சில வகுப்பினர், தாங்கள் படிக்கும் வழக்கமில்லையென்றும், வெளியிற் செல்லுதல் கூடாது என்றும், அவ்வாறு வழக்கத்துக்கு விரோதமான காரியம் செய்தால் உற

வினர் பழிப்பர் என்றும், தெய்வ கோபம் உண்டாகுமென்றும் கூறுவர். அத்தகைய கெட்ட வழக்கங்களை ஒழிக்கவேண்டும். என்பதனை

> " மூத்தபொய்ம்மைகள் யாவுமழிப்போம்
> மூடக்கட்டுகள் யாவுந்தகர்ப்போம் "

என்னும் அடிகளால் விளக்குகிறார்.

பாரதியாரின் புதுமைப் பெண்ணானவள் பட்டங்களாள்வதும், சட்டங்கள் செய்வதுமாகிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்கிறார். சரித்திரத்தை நோக்குமிடத்து, இராணி மங்கம்மாள் பாண்டிய நாட்டைத் திறமையுடன் ஆண்டதாய்த் தெரிகிறது. இன்னும் அவள், அசோகர் செய்ததைப்போல் சத்திரம் சாவடி கட்டி, குளங்கள் வெட்டி, சாலையோரங்களில் நிழலுக்காக மரங்கள் வைத்துப் பயிரிட்டு, கல்விச்சாலைகள் ஏற்படுத்தியதை நாமனைவரும் புத்தகவாயிலாக அறிந்துள்ளோம். காலஞ்சென்ற கவியரசி திரு. சரோஜனி நாயுடு, மேனாட்டு மொழியில் சிறந்த கவிதைகள் இயற்றியதுடன் அமையாது, ஐக்கிய மாகாணத்தை ஆட்சி புரிந்ததை நம் காலத்தில் கண்டும் கேட்டுமிருக்கிறோம். இப்பொழுதும் அகில இந்திய மாதர் சங்கமானது உலக முன்னேற்றத்துக்கான வழிகளை ஆராய்ந்து செய்வதில் ஈடுபட்டிருக்கிறது, இதனின்றும், " தொட்டிலை யாட்டுங்கை, தொல்லுலகை யாளுங்கை " என்னும் பழமொழி எவ்வளவு உண்மையானது என்பது புலனாகின்றது.

அடுத்தபடியாக, பெண்கள் வேதம் படைக்கவும், நீதிகள் செய்யவும் வந்ததாகப் பாரதியார் கூறுகிறார். வேதத்தைப் பெண்களும், ஒரு ஜாதியினரும் ஓதலாகாது என்று மறைத்து வைக்கப்பட்ட காரணத்தினால் மறையென்னும் பெயர்பெற்றது. ஆனால் மைத்ரேயி முதலியோர் வேதத்தைக் கற்கவில்லையா? நீதியை யெடுத்துக்கொண்டாலும் பெண்கள் இணையற்று விளங்கி வந்திருக்கின்றனர். தன் சகோதரன் செய்த தவறுக்காக அவனை மலையினின்றும் உருட்டும்படி கட்டளையிட்டாள் இராணி மங்கம்மாள். எனினும், மனுநீதி கண்ட சோழன் பொற்கைப் பாண்டியன் முதலியோரைப்போல் அவள் பிற

காலத்தில் எழுந்த காவியங்களில் இடம் பெறவில்லை. கிரேக்க நாட்டில் நீதிக்குரிய தெய்வம் பெண் தெய்வமென்று கருதப் பட்டது. அதன் கண்களைக்கட்டிக் கையில் ஒரு தராசு வைத் திருப்பதுபோல் அமைத்திருந்தனர். இதிலிருந்து எந்நாட்டிலும் எக்காலத்திலும் சிறந்த முறையில் நீதி வழங்கப்பட்டதென் பதும், பெண்களும் ஆண்களுக்குச் சமமாக நீதி செலுத்தக் கூடும் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

சாதம் படைப்பது மாத்திரமன்று; பெண்களால் தேவ சாதி படைக்கவும் கூடும். மக்களாய்ப் பிறந்துதான் நற்குண நற்செய்கைகள் காரணமாக, தேவராக மாறலாம். தாய்மாரின் குணாதிசயமே குழந்தைகளுக்கும் படிகிறது. சிறந்த அறிவு வாய்ந்தவரைக் கருவில் திருவுடையோர் என்கின்றனர். சிவாஜியின் தாயும் நெப்போலியனது தாயும் தம் குழந்தைகள் வயிற்றிலிருக்கும்போது வீரகாவியங்களைப் பிறர் வாயிலாகக் கேட்டும், கற்றும் வந்தது, அன்னாரது புதல்வர் சிறந்த வீர ராய்த் திகழ்வதற்கு ஓர் காரணமெனக் கருதப்படுகின்றது. அதனாலன்றோ 'சூரப்பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்' என்கிறார் பாரதியார். குழந்தையானது நாள் முழுவதும் தன் தாயினிடமே இருக்கிறது. அது மொழி, கற்றுக்கொள்வதும் தாயினிடந்தான். அதனால்தான் சொந்தமொழி தாய்மொழி யெனப்பட்டது. எதிர்காலப் பிரஜைகளாகவிருக்கும் இளங் குழந்தைகளை உருவாக்கும் சிற்பியாக விளங்குபவள் தாய். இறுதியாக,

> " காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்
> காரியம் யாவினுங் கைகொடுத்து
> மாதரறங்கள் பழைமையைக் காட்டிலும்
> மாட்சி பெறச்செய்து வாழ்வோம் "

என்று பாடினார்.

பெண்ணானவள் உகந்த கணவனையடைந்து, அவனது இன்பத்துன்பங்களில் பங்கு பெற்று, பண்டைக்காலத்தில் மாதர் செய்துவந்த பலவகைத் தானதர்மங்களைச் செய்து, சீரிய முறையில் வாழ்க்கை நடத்தவேண்டும் என்கிறார் கவிஞர். பாரதியார் கூறிய புதுமைப் பெண்ணைப் போலவே

எல்லாப் பெண்களும் நடப்பார்களானுல், அவர்கள் உலக முன்னேற்றத்துக்குச் சிறந்த தொண்டு புரிந்தோராவர்.

அருஞ்சொற் பொருள்

விண்மீன் - நட்சத்திரங்கள். அங்கலாய்க்கிருர் - மனம் வருந்துகிருர். கற்கை - கற்றல். அருகதை - தகுதி. கேவலம் - இழிவு. ஏறு - காளை. கோருபவர் - விரும்புபவர். பிரதானம் - முதன்மை. நன்னடை - நல்லொழுக்கம். திமிர்ந்த - நிமிர்ந்த. செம்மை மாதர் - கற்புடைப் பெண்கள். திறம்புவதில்லை - நெறி தவறுவதில்லை. முன்னணிக்கு - முன்னேற்ற நிலைக்கு. மூத்த பொம்மைகள் - பழமையான கெட்ட வழக்கங்கள். தொல்லுலகு - பழமையாக உலகத்தை. பிரஜை - குடிகள்.

பயிற்சி வினுக்கள்

1. புலவர்கள் பெண்மைக்களித்துள்ள சிறப்பைப் புலப்படுத்துக.
2. இடைக்காலத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட இழிநிலை] யாது? பாரதியார் இதனை எங்ஙனம் தெரிவிக்கிருர்?
3. பெண்கள் திருமணத்தைப்பற்றிய பழங்கால நிலை இடைக்கால நிலைகளைத் தெரிவிக்க.
4. பாரதியார் படைத்துள்ள புதுமைப் பெண் எப்படிப்பட்ட குணங்களையுடையவளாவாள்? அவள் எத்தகைய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று பாரதியார் கூறுகின்றுர்?
5. பெண்கள் எவ்வாறு வாழ்க்கை நடத்த வேண்டுமென்று பாரதியார் தெரிவிக்கின்றுர்?

8. எவரெஸ்டு வீரர்

திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ. எல். டி., பி. ஓ. எல்.

எவரெஸ்டு என்னும் கொடுமுடி உலகத்திலேயே மிகப் பெரியதாகிய இமயமலையின் மிக வுயர்ந்த சிகரமாகும். அதன் உயரம் 29002 அடி அல்லது சுமார் 5½ மைல். இமயத்தில் இத் தகைய இணையற்ற கொடுமுடி ஒன்று இருக்கிறதென்று 1841–ஆம் ஆண்டில் ஸர் ஜார்ஜ் எவரெஸ்டு என்பவரால் கண்டுபிடிக்கப் பெற்றதால், அதற்கு அவர் பெயரே இடப் பெற்றது.

இக்கொடுமுடியைக் காணவும் இதன் மீதேறவும் பன் முறை பலர் முயன்றுள்ளனர். 1921-ஆம் ஆண்டு முதல் 1953-ஆம் ஆண்டுவரை பல நாட்டவர்கள் சேர்ந்து பதினொரு முறை இதன்மீது படையெடுத்தனர். இறுதியாகப் பதினோ ராம் முறை இதனை இருவர் வென்று விட்டனர். அவர்களுள் ஒருவர் **தென்சிங்கு நார்க்கே** (Tensing Norkey) என்னும் இந்தியர்; மற்றொருவர் **எட்மண்டு ஹில்லரி** (Edmund Hillary) என்னும் நியூஜிலாந்தியர். இவ்விருவருமே 'எவ ரெஸ்ட் வீரர்' என்று சிறப்பாக இங்குக் குறிக்கப் பெறுவர். எனினும் எவரெஸ்டு மீது படையெடுத்தவர் அனைவருமே பொதுவாக வீரர் என்பதில் ஐயமில்லை. ஏனெனின் அதன் மீது ஏறுவதில் உள்ள இன்னல்களையும் பேரிடர்களையும் நோக்குமிடத்து, அவற்றுக்குப் பணியாது, தன் மன வலியா லும் விடாப் பிடியாலும் பன் முறை அதனை மேலும் தாக்கிய வர்களையும், அம்முயற்சியில் உயிர் துறந்தவர்களையும் வீரர் என்றழையாமல் வேறு என்னென்றழைப்பது? வீரர் என் போர் எத்தகைய அபாயமான நிலையினும் தம் உயிரைப் பொருட்படுத்தாது அதனைப் பணயம் வைத்துச் செயற்கரும் செயல்களில் முனைபவரும் அதில் வெற்றி பெறுபவருமே யன்றோ?

எவரெஸ்டு மீது ஏறுவதில் உள்ள இன்னல்கள் யாவை? அவற்றை எங்ஙனம் அவ்வீரர் வென்றனர்? இச்செய்திகளை

ண்டு நோக்குவோம். எவரெஸ்டு மீது ஏறுவதற்கு இமயத்தின் அடிவாரத்திலிருந்து நேரான பாதை யொன்றும் இலது. இமயத்தில் சுமார் 20000 அடிக்கு மேல் எப்பொழுதும் பனி மூடியே இருக்கும். அப்பனி, குன்றுகளாகவும் பாறைகளாகவும் சரிந்து கீழே விழும். அங்குப் பனிப் புயல்களும் கடுங் காற்றுகளும் எப்பொழுதும் வீசியவண்ணமிருக்கும். நீரெல்லாம் உறைந்து பனியாகவே இருக்கும். மலையேறுவோர் பருகுவதற்குக்கூட அங்கு நீர் இராது. அன்றியும் பெரும்பனியாறுகள் அதிக உயரத்திலிருந்து பெருக்கெடுத்துக் கீழே இழிந்து, பனிக்குன்றுகளையும் பாறைகளையும் அடித்துக்கொண்டு வரும். உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிய உயிர் வளியும் அங்குப் போதிய அளவில் இல்லை. ஆகையால், மலையேறுவோர்க்கு உயிர்ப்புத் தடைபட்டு, அதன் காரணமாக மிகுந்த களைப்பு, உடல் மெலிவு, பசியின்மை முதலிய நோய்கள் உண்டாகும். சில சமயங்களில் குருதி உறைந்தும் பனிசாடியும் அவர்கள் இறந்து விடுவதுண்டு. இவையெல்லாம் போதாவென்று இடையிடையே பெரும் பள்ளங்கள், செங்குத்தான சரிவுகள், வழுக்கல் மிகுந்த பாறைகள் இருப்பதால் அவற்றைக் கடந்து செல்வதும் அரிது. இத்தகைய பல இடையூறுகளையும் இன்னல்களையும் மேற்கொண்டு மலையேறிய மக்களது வீரத்தை என்னென்று வியப்பது?

இப்பேரிடர்களை யெல்லாம் வென்று உயிருடன் எவரெஸ்டின் உச்சிமீது ஏறுவதென்பது முதலில் பகற்கனவாகவே கருதப்பெற்றது. முதலில் படையெடுத்த சிலர் இது தம்மால் இயலாத செயலென்றே எண்ணி, கைவிட்டு விட்டனர். எனினும், இயற்கையின் கொடிய சக்திகளை வெல்வதற்குச் செயற்கையாகச் சில ஆயுதங்களைச் செய்து கொண்டு ஏறினால் எவரெஸ்டை எட்டிவிடலாம் என்று மற்றும் சிலர் கருதினர். அங்ஙனமே இமயத்தில் மிக வுயரத்தில் உள்ள குளிர், பனி, காற்றின் அழுத்தக் குறைவு, முதலிய துன்பங்களை எதிர்த்து வெல்லச் சில தனியான ஆடைகள், உயிர்ப்புக் கருவிகள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு மலையேறிகள் சென்றனர். அவர்களுக்கும் பன்முறை வெற்றி கிடைக்கவில்லை. ஆனால் ஒரு முறைக்கு மறுமுறை அவர்கள் அதிக உயரம் ஏறுவதில் வெற்றி

பெற்றனர். இடையில் உண்டாகக்கூடிய எதிர்பாராத பலவித இன்னல்களை வெல்லவும் அவர்கள் வழி வகைகளைத் தெரிந்து கொண்டனர். இவற்றின் பயனாகவே இறுதி வெற்றி கிட்டியது. ஆகவே, முன்பு ஏற்பட்ட தோல்விகளே வெற்றிக்கு அடிகோலின என்று ஐயமற உணரலாம்.

முதலில் 1921-ல் **கர்னல் ஹோவர்டுபெரி** என்னும் ஆங்கிலேயரின் தலைமையில் எவரெஸ்டைத் தாக்குவதற்கு ஒரு ஆராய்ச்சிப்படை சென்றது. இப்படையெடுப்பின் நோக்கம் எவரெஸ்டுக்கு வழிகாண்பதேயாகும். இக்குழுவினர் திபேத் வழியாகச் சென்று, ராஸ்க்பெக் என்னும் பனியாற்றைத் தொடர்ந்து இமயத்தின் மீதேறி, எவரெஸ்டை யடையக் கருதினர். இப்படையில் சென்ற ஒருவர் குளிர் மிகுதியால் இதய நோய் கண்டு இறந்துவிட்டார். இதையும் பொருட்படுத்தாது இக்குழுவின்ர் 23000 அடி வரை இமயத்தின் மீது ஏறிப் பின்னர், அங்குள்ள கடும்பனியையும் காற்றையும் குளிரையும் தாங்க முடியாமல் திரும்பி வந்துவிட்டனர். இரண்டாம் முறையாக அடுத்த ஆண்டு சில ஆங்கிலேயர் எவரெஸ்ட் மீதேற முயன்றனர். **ஜெனரல் புரூஸ்** என்பவர் தலைமையில் சென்ற இக்குழு 27300 அடி உயரம் வரை ஏறிவிட்டது. அதற்கு மேல் ஏற முடியவில்லை. 1924-ல் **கர்னல் நாட்டன்** தலைமையில் **மலாரி, இர்வின்** என்னும் இருவர் 28230 அடி வரை ஏறிப் பின்னர் திரும்பி வரவே இல்லை. அவர்கள் அங்கேயே இறந்து பட்டனர். மீண்டும் 1933-ல் **ரட்லெஜ்** தலைமையில், **வேஜர், ஹாரிஸ்,** என்றிருவர் 28100 அடிவரை சென்று தோல்வியுற்றுத் திரும்பினர். 1935-ல் **எரிக்ஷிப்டன்** தலைமையில் மீண்டுமோர் ஆராய்ச்சிப் படை சென்றது. அதனாலும் அதிக பலன் கிடைக்கவில்லை. ஆனால் அவ்வாராய்ச்சிப் படையினர் கண்டறிந்த செய்திகளைப் பயன்படுத்தி 1936-ல் **ரட்லெஜ்** மறுமுறை படையெடுத்தார். எதிர்பாராத விதமாகப் பருவக் காற்று அக்குழுவினரைப் பலவாறு அல்லற் படுத்திற்று. ஆகவே, அதிக உயரம் செல்வதற்கு முன்பே அவர்கள் இறங்கிவிட வேண்டியதாயிற்று. 1938-ல் **டில்மன்** என்பார் ஒரு படையை நடத்திச் சென்று 27300 அடி உயரம் ஏறினர். இம்முறையும் காற்றின் கொடுமையால் தோல்வியே உண்டா

யிற்று. பின்னர் இரண்டாம் உலகப் பெரும்போர் தொடங்கி விட்டதால் எவரெஸ்டு மீது ஏற வீரர்கள் ஒருவரும் முன்வர வில்லை. 1951-ல்தான் மறுமுறை படையெடுப்பு நிகழ்ந்தது.

அவ்வாண்டு எரிக்ஷிப்டன் எவரெஸ்டு மீது ஏறுவதற்கு ஒரு புதுப்பாதை காண ஆராய்ச்சி நடத்தினர். இதுவரை யாவரும் கையாண்ட திபேத் வழியை விட்டு நேபாளத்தின் வழியாகச் சென்று எவரெஸ்டின் தென் பகுதி மீது ஏற அவர் திட்டமிட்டார். நேபாளத்தின் வழியாக மேற்கே சென்றால் 20000 அடி உயரத்தில் ஒரு பெரும் பள்ளத்தாக்கு இருக்கிற தென்றும் அதில் பாயும் **லோட்சே** என்னும் பனியாற்றைத் தொடர்ந்து மேலே சென்றால் எவரெஸ்டை யடையலாம் என்றும் அவர் கண்டார். இதன்பயனாக, இவ்வழியையே பின் பற்றி 1952-ல் சுவிட்ஸர்லாந்து நாட்டினர் இருமுறை எவ ரெஸ்டு மீது ஏற முயன்றனர். இக்குழுவைச் சேர்ந்த **தென் சிங்கு, லாம்பர்ட்** ஆகிய இருவரும் மே 28-ம் நாள் 28210 அடி உயரம் சென்று விட்டனர். ஆனால் மேலே செல்வதற்குத் தடையாக அங்கு ஒரு பெரும் சரிவு செங்குத்தாக இருந்தது. அதன்மீது ஏற வழி தெரியாமல், அவர்கள் கீழே இறங்க வேண்டிய தாயிற்று.

இறுதியாக 1953-ல் **கர்னல் ஜான் ஹண்ட் (Colnel Jhon Hunt)** என்னும் ஆங்கிலேயர் தலைமையில் ஒரு குழு எவரெஸ்டு மீதேறத் திட்டமிட்டது. இக்குழுவின ருள் பலர் மலையேறிப் பழகியவர். இவர்கள் மிகச் சிறந்த ஆயத்தங்களுடனும், விரிவான திட்டத்துடனும், இம்முறை எப்படியும் எவரெஸ்டை வெல்வது என்ற உறுதியுடன் வந்தனர். ஷிப்டனால் கண்டுபிடிக்கப் பெற்ற புதுப் பாதை யைப் பின்பற்றிச் சென்று 1952-ல் எவரெஸ்டைத் தாக்கிய சுவிஸ் குழுவினர் பெற்ற அநுபவங்களையும் உணர்ந்து, கர்னல் ஹண்ட் வெற்றி கிட்டுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார். சுவிஸ் குழுவினர் மலைமீது இடையிடையே அமைத்திருந்த பாசறைகளைப் போலவே பாசறைகளையமைத்து அங்கு வேண்டிய பொருள்கள் யாவற்றையும் சேமித்து வைத் துக்கொண்டு, அப்பாசறைகளில் தங்கி இளைப்பாறிச் சென்று

தக்க பருவ நிலை வாய்க்கும்போது எவரெஸ்டு உச்சியையடைய அவர் திட்டமிட்டிருந்தார்.

இக்குழுவினர் 1953-ம் ஆண்டு மார்ச்சு 10-ஆம் நாள் நேபாளத்தின் தலைநகராகிய காட்மாண்டுவிலிருந்து புறப் பட்டனர். அங்கிருந்து மேற்கு நோக்கி 170 மைலுக்கப்பா லுள்ள **நாம்சி பஜாருக்கு** அம்மாத இறுதியில் வந்து சேர்ந்தனர். இவர்களது சுமைகளை 362 கூலிகள் தூக்கிச்சென் றனர். திபேத்திலுள்ள ஷெர்ப்பா வகுப்பினராகிய இருபதுவழி காட்டிகளையும் இவர்கள் உடனழைத்துச் சென்றனர். அவர்க ளுள் முன்படையெடுப்புகளில் இயமத்தின் மீது ஏறிப் பயிற்சி பெற்ற பலர் இருந்தனர்.

இவ்வகுப்பைச் சேர்ந்த **தென்சிங்கு நார்க்கே** என்னும் வீரர் ஏழு படையெடுப்புகளில் பங்கு எடுத்துக்கொண்டு தன் திறமையையும் வீரத்தையும் நிலைநாட்டியவர். எவரெஸ்டின் மீது ஏறுவதற்கு அவருடைய துணை இன்றியமையாதது என்ற எண்ணம் யாவர் மனதிலும் வேரூன்றிவிட்டது. அத்தகைய அவரது திறமையை மெச்சி நேபாள அரசாங்கம் '**மலைப்புலி**' என்னும் பொருள் படத்தக்க **தென்சிங்கு** என்னும் பட்டத்தை அவருக்களித்தது. இவ்வீரரையும் குழுவினர் தமக்குள் ஒருவ ராகச் சேர்த்துக் கொண்டு படையெடுத்தனர். குழுவின் தலை வர் **ஹண்டு,** இவரையும் **ஹில்லரி** என்பவரையுமே இரண் டாம் முறையாக எவரெஸ்டைத் தாக்கத் தேர்ந்தெடுத்தார்.

படைவீரர் அனைவரும் மேலைப்பள்ளத் தாக்கின் தொடக் கத்தில் 21150 அடிஉயரத்தில் ஒரு பாசறையமைத்துக்கொண் டனர். பின்னர் 28500 அடிவரை பல்வேறு இடங்களில் பாச றைகளை யமைத்த வண்ணம், எவரெஸ்டு உச்சிக்கு 500 அடி உயரம் வரை சென்று விட்டனர். வழியில் ஏறுதற்கரிய பனி நிறைந்த பாறைகளும் செங்குத்தான சரிவுகளும் பல இருந்தன. பல்விடங்கள் கால் ஊன்றவும் முடியவில்லை. அவர்கள் பனியில் கோடரியால் படிகளை வெட்டிக்கொண்டு அரிதின் முயன்று சென்றனர்; உயிர்ப்பதற்கு உயிர்வளிக்கலன்களையும் (Oxygen apparatus) உணவு, உடை முதலியவைகளையும் 28500 அடி

உயரத்தில் இருந்த எட்டாம் பாசறைவரை எடுத்துச் சென்ற னர். அங்கிருந்து மே 27-ம் நாள் எவரெஸ்டு உச்சிமீது ஏற போர்டில்லான், இவான்ஸ், என்ற இருவர் புறப்பட்டனர். ஆனால், அவர்கள் சிறிது தூரம் சென்றதும் அவர்களது உயிர் வளிக்கலன்களில் பழுது ஏற்பட்டது. மேலே செல்லவழியும் தெரியவில்லை. ஆதலால், அவர்கள் தம் பாசறைக்குத் திரும்பி விட்டனர்.

மீண்டும், மே 29-ம் நாள் காலை தென்சிங்கும் ஹில்லரியும் தம் பாசறையினின்றும் புறப்பட்டுச் சென்றனர். இயற்கை அவர்களை இன்முகத்துடன் வரவேற்றது. வானத்தில் அமைதி யும் தெளிவும் காணப்பெற்றன; குளிரும் காற்றும் கூடக் குறைந்திருந்தன. அதிக ஊக்கத்துடனும் மனவலியுடனும் அவர்கள் எவரெஸ்டின் உச்சியை எட்டிப் பிடிக்க முனைந்த னர். வழியில் செங்குத்தான பனிமூடிய சரிவுகள் இருந்தன. அவற்றின்மீது ஊர்ந்தும், படிகளை வெட்டியும் சென்று **கன் னிச் சரிவு** (Virgin Ridge) என்னும் ஒரு பெரும் பாறை யிடம் வந்துற்றனர். அச்சரிவே முன்பு சென்ற இரு வீரரை யும் அச்சுறுத்தி யனுப்பியது. அதன்மீது இவ்விருவரும் படி களை வெட்டிக் காலை யூன்றிக் கயிறுகளின் உதவியால் ஏறி விட்டனர். ஆனால் மீண்டும் சில பெரிதும் சிறிதுமான சரிவு கள் குறுக்கிட்டன. அவற்றையும் கடந்து காலை 11-30 மணிக்கு அவ்விருவரும் எவரெஸ்டு உச்சியை யடைந்து விட்டனர்.

உலகத்திலேயே மிகவுயர்ந்த அவ்வுச்சியை யடைந்ததும் அவர்களுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அங்கிருந்து சுற் றிலும் உள்ள பல காட்சிகளைக்கண்டு மகிழ்ந்து அவற்றைப் படம் பிடித்துக் கொண்டுவந்தனர். அன்றியும் அங்கு இந்தியக் கொடி, நேபாளக்கொடி, பிரிட்டிஷ்கொடி, ஐக்கியநாடுகளின் கொடி ஆகியவை ஊன்றப்பெற்றன. பதினைந்து நிமிடங்கள் அவர்கள் அங்குத் தங்கிப் பின்னர் கீழே இழிந்து வந்து விட்டனர்.

அவர்களது அரும்பெரும் செயலைக்கண்டு உலகம் அவர் களைப் போற்றிப் பல சிறப்புகள் செய்தது. இந்திய அரசாங் கமும் இங்கிலாந்தின் அரசாங்கமும் தென்சிங்கிற்குப் பொற்

பதக்கங்கள் அளித்தன. பல விடங்களில் அவருக்கு வரவேற்பும் பணமுடிப்பும் அளிக்கப் பெற்றன. ஹில்லரியையும், ஹண்டையும் இங்கிலாந்து அரசாங்கம் 'ஸர்' பட்டம்கொடுத்துச் சிறப்பித்தது. உலகத்தில் உள்ள தலைசிறந்த செய்தித்தாள்கள் எல்லாம் எவரெஸ்டு வீரரின் அரும்பெரும் செயலைப் பாராட்டிப் பலவாறு புகழ்ந்தன.

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

அன்றோ?

அருஞ்சொற் பொருள்

இன்னல்கள் - துன்பங்கள். பணயம் - பந்தயம். உயிர்ப்பு - மூச்சு உயிர்வளி - பிரயாணவாயு. குருதி - இரத்தம். சாடி - தாக்கி. குழு — கூட்டம். உயிர்வளிக்கலன் - பிராணவாயு சேமிப்புக் கருவி. அச்சுறுத்தி - பயமுறுத்தி. இழிந்து - இறங்கி.

பயிற்சி வினாக்கள்

1. 'எவரெஸ்டு'—பெயர்க்காரணம் கூறுக.
2. எவரஸ்டுமீது ஏறுவதில் உள்ள இன்னல்களைத் தொகுத்து எழுதுக.
3. எரிக்ஷிப்டன் எவரெஸ்டு மீது ஏறுவதற்குக் கண்ட புதுப் பாதை ஏது? அவ்வழியில் செல்ல முயன்றவர் யாவர்?
4. கர்ஜனல் ஜான் ஹண்டு என்பவர் யார்? இவர் எவரெஸ்டு படையெடுப்புக்குச் செய்திருந்த திட்டங்கள் யாவை?
5. எவரெஸ்டு கொடுமுடியைக் கண்ட வீரர் இருவர் யார்? அங்கு அவர்கள் செய்தன யாவை?

852/295

TAMIL MANI MALAI

FORM IV PART II

BY

VIDWAN T. AIYANPERUMAL KONAR

&

VIDWAN T. K. KUPPUSWAMI ALWAR

★

PALNIAPPA BROTHERS

TRICHY & MADRAS-5.

Price As. 0-12-0

Asian Printers, Madras-5.